கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை...



பெற்றோர்களே!

கண்ணன் ஆரம்பித்து இந்த இதழுடன் ஓராண்டு பூர்த்தியாகிவிட்டது. அது தமிழ் நாட்டுக் குழந்தைகளுக்கு இணையற்ற தோழனாகிவிட்டது.

குழந்தைகள், கண்ணன் கதைகளை ஆசையோடு படிக்கிறார்கள்; கண்ணன் விளையாட்டுக்களை ஆடி மகிழ்கிறார்கள். கண்ணன் அறிவுரைகளால் மனவளர்ச்சி பெறுகிறார்கள். பெற்றோர்கள், கண்ணனில் வரும் விஷயங்களெல்லாம் மிக நல்லவை, பயனுள்ளவை, அறிவைத் தூண்டுபவை என்று உணர்ந்து பாராட்டுகிறார்கள்.

குழந்தைகள் என்ன படிக்கிறார்கள், என்ன விளையாடுகிறார்கள் என்பதைப் பெற்றோர் சிரத்தையுடன் கவனிப்பது இயற்கை; அவசியம். நல்லது கெட்டதை உணரும் சக்தி குழந்தைகளுக்கு இல்லை. கதை என்றால் ருசியாயுள்ள எதையும் படித்து விடுவார்கள். விளையாட்டு என்றால் பயனுள்ளதா, அபாயமில்லாததா என்று யோசியாமலே ஈடுபடுவார்கள். எதைத் தெரிந்துகொண்டாலும் குழந்தைகள் தவறில்லாமல் தெரிந்துகொள்ளவேண்டும். தவறான விவரங்கள் குழந்தை மனத்தில் பதிந்துவிட்டால் பிறகு அதை மாற்றமுடியாது. கண்ணனில் வரும் கதைகளெல்லாம் ருசியானவை. அதோடு தீமையற்றவை. அதில் வரும் விளையாட்டுக்கள் உடலுக்கு உறுதியும் அறிவுக்குக் கூர்மையும் தருபவை. விஷயங்களெல்லாம் பிழையற்றவை. குணத்தை வளர்க்கக்கூடிய பெரியோர் சரித்திரம், இனிமையான பாட்டுக்கள், பொழுது போக்குக்கான வேடிக்கை விநோதங்கள், அழகான சித்திரங்கள்—இவையெல்லாம் கண்ணனில் வருகின்றன. இன்னும் பிராணிகளைப்பற்றியும் பறவைகளைப்பற்றியும் பல தேசத்துச் சிறுவர்களைப்பற்றியும் கட்டுரைகள் அவ்வப்போது வருகின்றன.

முதல் ஆண்டிலேயே ஒவ்வோர் இதழும் முன் இதழைவிடச் சிறப்பாகக் கொண்டுவரவேண்டும் என்று முயன்றிருக்கிறோம். இன்னும் எத்தனையோ புதிய அம்சங்களை வர வரச் சேர்க்கவேண்டும் என்பது எங்கள் ஆசை. இதுபற்றி உங்கள் யோசனைகளையும் வரவேற்கிறோம்.

கண்ணன், குழந்தைகளுக்கு மகிழ்ச்சியையும் குதூகலமும் மனவளர்ச்சியையும் தரவேண்டும் என்பதே எங்கள் நோக்கம். இதற்கு இசைய கண்ணனில் ஒவ்வொரு விஷயத்தையும் தயாரிக்கிறோம். இது பெற்றோர் அனைவரும் அறிந்த விஷயமே. குழந்தைகளின் [illegible]வற்ற அன்பும் பெற்றோர்களின் சிறந்த ஆதரவுமே கண்ணனை மு[illegible] வருஷத்தில் பெரிதும் வளர்த்திருக்கின்றன. இனியும் கண்ணனை அவை வளர்க்கும் என்பதில் எங்களுக்கு முழு நிச்சயம் உண்டு.

கண்ணன்

தபால் பெட்டி : 604,
மயிலாப்பூர்,
சென்னை, 4.

வருஷ சந்தா
ரூ. 3/-

கலைமகள்
மஞ்சரி
கண்ணன்
குடும்பச் சந்தா
ரூ. 12/-

பொருளடக்கம்

மலர்: 1 இதழ்: 12

குழந்தைகளே! .. .. .. பக்கம் 2
சுண்டெலி - அழ. வள்ளியப்பா 3
ஜக்கு துப்பறிகிறான் - 'ஆர்வி' 4
கிரிக்கெட் கற்றுக்கொள் - ராம்சிங் .. 9
நினைத்ததும் நடந்ததும் - எஸ். சீதா .. 13
ஏழு திருடர்கள் - 'ரமணி' 17
புத்திசாலி - எம். மோகன் 24
மகுடிக்காரன் - 'சோமசன்மா' 25
அதிருஷ்ட மோதிரம் - சங்கர் 30
தாமுவின் கனவு - 'கிரன்' 34
சாக்லெட் கேம் - 'சுண்டு' 39
கண்ணன் கழக அங்கத்தினர்கள் .. 40
பவழவல்லி - கி. ரா. 43
ஜபம் பலித்தது - கி. வா. ஜகந்நாதன் .. 49
க்விஸ் 53
எண்ணிலே படம் - 'மூட்டை' 54
தாமரை இளவரசி - 'சந்திரன்' 55
நீங்களே செய்யலாம் 60
கண்ணன் தபால் 61

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

குழந்தைகளே!

நீங்கள் எல்லாம் வெகு ஆனந்தமாகத் தீபாவளியைக் கொண்டாடியிருப்பீர்கள்! ஆனால் எனக்கு மட்டும் அவ்வளவு குஷியில்லை. ஏன் தெரியுமா? கண்ணன் படிக்கும் எல்லாக் குழந்தைகளையும் என்னால் திருப்தி செய்யமுடியாமல் போய் விட்டது; அதனால்தான். வந்த மலர் போதாது, மேலும் வேண்டும் என்று ஏஜெண்டுகள் தந்தி மேல் தந்தி அடித்தார்கள். நூற்றுக் கணக்கான குழந்தைகள் பல கடிதங்கள், காரசாரமாக எழுதினார்கள். எல்லாருக்கும் மிகுந்த மன வருத்தத்துடன் 'கண்ணன் மலர் கைவசமில்லை' என்று கையை விரிக்கும்படி ஆகிவிட்டது. பார்க்கப்போனால் குற்றம் என்னுடையதுதான்! கண்ணன் மீது உங்களுக்குள்ள அன்பை உணராமல் அளவாகவே அச்சிட்டுவிட்டேன் இன்னும் கூடுதலான பிரதிகள் அச்சிட்டிருக்க வேண்டும். அடுத்த வருஷம் இதையும் விட அருமையான மலர் ஒன்றை வேண்டிய அளவு கட்டாயம் வெளியிடுகிறேன்.

இந்த வருஷத்துக் கண்ணன் தீபாவளி மலரைப் பாராட்டி என் மேஜைமேல் வந்து குவிந்திருக்கின்றன கடிதங்கள். 'பிரமாதம் வெகு ஜோர், பலே பலே, பேஷ் பேஷ், முதல் தரம்! ஏ 1, அபாரம்' என்று பல கடிதங்கள், தந்திகளும் கூட, வந்து குவிந்துவிட்டன. மாதிரிக்கு இரண்டே இரண்டு கடிதங்களைத் தபால் பகுதியில் வெளியிட்டிருக்கிறேன். நீங்கள் அவர்கள் சொல்வதை அப்படியே ஆமோதிக்கிறீர்கள், அல்லவா?

ராம்சிங் கிரிக்கெட் பாடத்தை நீங்கள் மிகவும் விரும்புகிறீர்கள் என்று நம்புகிறேன். பல குழந்தைகள் அதை ரஸிப்பதாக அவருக்கே எழுதியிருப்பதாக அவர் கூடச் சொன்னார்.

பவழவல்லி இந்த இதழுடன் முடிவுறுகிறது. சில குழந்தைகள் அதைச் சீக்கிரம் முடிக்கச் சொல்லவேண்டாம் என்றுகூட எழுதினார்கள். இருக்கட்டும்; அதே ஆசிரியரை வேறு ஒன்று எழுதச் சொன்னால் போச்சு! என்ன பிரமாதம்!

இந்த இதழுடன் கண்ணனுக்கு ஓர் ஆண்டு பூர்த்தியாகிறது. உங்கள் அன்புக்கும் உத்ஸாகத்துக்கும் நான் நன்றி கூறுகிறேன். இந்தப் புது வருஷத்தில் உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தப்போகும் பல அம்சங்கள் இருக்கின்றன. அடுத்த இதழ் ஆண்டு மலராகச் சிறப்புடன் வெளிவரும்.

கண்ணன் கழகம் அமோகமாய் வளர்ந்து வருகிறது. இப்பொழுது எவ்வளவு அங்கத்தினர்கள் இருக்கிறார்கள் என்று நீங்கள் சொல்லுங்கள், பார்க்கலாம். 3000! 3500! 4000! இல்லை; 4500-க்கும் மேல்! அடுத்த கண்ணன் கழகக்கூட்டம் திருச்சியில் நடைபெறும். எல்லாக் கண்ணன் கழக அங்கத்தினர்களும் அதில் கலந்து கொள்ளலாம். அழைப்புக்கள் தயாராகின்றன. தேதியை எதிர் பாருங்கள்.

—ஆசிரியர்.

சுண்டெலி

அழ. வள்ளியப்பா

சுண்டெலி, சுண்டெலி,
துறுதுறுத்த சுண்டெலி.
பண்டமெல்லாம் கெடுத்திடும்
பானை சட்டி உருட்டிடும்;
கண்ட கண்ட பொருளெல்லாம்
கடித்து நாசம் செய்திடும்.
சுண்டெலி, சுண்டெலி,
துறுதுறுத்த சுண்டெலி.
பையில் ஓட்டை போட்டிடும்
பணத்தை இழக்கச் செய்திடும்;
கையைக் காலை இரவிலே
கடித்து என்னை எழுப்பிடும்.
சுண்டெலி, சுண்டெலி,
துறுதுறுத்த சுண்டெலி.

ஜக்கு துப்பறிகிறுன் - - - - - 'ஆர்வி'

'குரில்......குரில்......கு ரில்' என்று அணில் கத்திற்று.

கதவு மூலையில் ஜன்னல் பக்கத்தில் நின்ற நந்து இப்போது மாடிப்படிகளில் பார்வையைச் செலுத்திஞன். அவன் சிறிதும் அசையவில்லை. யாரும் வருவதாகத் தெரியவில்லை. ஆனல் அணில் மட்டும் இரண்டு, மூன்று தடவை கத்திக் கொண்டே இருந்தது.

நந்து கீழ்ப் படிகளேயே கவனித்துக்கொண் டிருந்ததால் கதவுப் பக்கத்தைப் பார்க்கவில்லை. கதவு மெதுவாகத் திறந்துகொண்ட சத்தமும் கேட்கவில்லை. திறந்த கதவு வழியாக ஒருவன் மெதுவாகத் தலையை நீட்டி எட்டிப் பார்த்தான். யாரோ ஒரு பட்டிக்காட்டுச் சிறுவன் போல நந்து ஒளிந்துகொண் டிருப்பதை அவன் பார்த்துவிட்டுத் தலையை உள்ளே இழுத்துக் கொண்டான். இதெல்லாம் நந்துவுக்குத் தெரியவே தெரியாது.

ஐந்து நிமிஷம் கழித்து, கதவு மறுபடியும் திறந்துகொண்டது. முதலில் எட்டிப் பார்த்தவன் மெதுவாக வெளியில் வந்தான். கண்மூடிக் கண் திறப்பதற்குள் அவன் நந்துவின் கைகளை இரும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டான்.

"அடே, யாரடா பயல் நீ?" என்று அவன் கேட்டான்.

நந்து திடுக்கிட்டுப் போய்த் திணறிஞன். இந்த ஆள் எப்படி மேலே வந்தான்? ஆளைப் பார்த்தால் அப்படி ஒன்றும் திருடனைப் போலவோ முரடனைப் போலவோ இல்லை. யாராவது பள்ளிக்கூடத்து வாத்தியாராய் இருக்குமோ என்று அவனுக்குத் தோன்றிற்று. மேலே ஜக்குவல்லவா போயிருக்கிறுன்? இந்த ஆளும் எங்கேயிருந்தான்? இவன் ஜக்குவைப் பார்த்திருப்பாஞ, மாட்டாஞ?

"அடே, யாரடா நீ என்று கேட்கிறேன்; முழிக்கிறுயே?" என்றுன் வந்த ஆள்.

"என்னே இப்படிப் புடிச்சீன்ஞ, நான் அழுவேன்... ஊ... ஊ..." என்றுன் நந்து.

"யாரடா நீ, அதைச் சொல்லு!"

"ரேஷன் பத்தல்லேன்னு எங்கப்பாரு வந்து...ரேஷன் பத்தல்லேன்னு..."

"செவிட்டுப் பயலா நீ! சரியாய்ப் போச்சு!"

"அங்கே பங்களா கட்றுங்கள்ளே, அங்கே வேலை செய்யருரு எம் மாமன்!"

"உன் தலை! நீ—எங்கேடா வந்தே?" என்று உரக்கக் கேட்டான் வந்த ஆள்.

"எம் பேருதான் சொன்னேனே - முனிசாமின்னு."

"அதிர்வேட்டுத்தான் போட்டுப் பேசணும் போலிருக்கு உங்கிட்டே!" என்று மெதுவாகச் சொல்லிக் கொண்டு, "இங்கே என்னடா செய்யறே?" என்றான் சத்தம் போட்டு.

"கொய்யாக்கா ... இனிமே பறிக்கமாட்டேன்" என்றான் நந்து.

"திருட்டுப் பயலே, வா இங்கே!" என்ற அந்த ஆள் நந்துவைக் கரகரவென்று பிடித்து இழுத்துக்கொண்டு கீழே இறங்கினான்.

"எம் மாமன் ரொம்பப் பொல்லாதவரு - அடிப்பாரு" என்றான் நந்து, அசல் செவிடன் போல.

"யாரையடா அடிப்பாரு? என்னையா அடிப்பாரு? திருட்டுப் பயலே! வாடா இங்கே" என்று அந்த ஆள் அவனை இழுத்துக் கொண்டேபோய்க் கீழே கொண்டு விட்டு, "ஓடு பயலே, திரும்பிப் பார்த்தியோ தொலைச்சுடுவேன்!" என்று தள்ளிவிட்டான்.

நந்து எதிரே தெரிந்த ஒரு நிலை வாசலுக்குள் நுழைந்தான். என்ன துரதிருஷ்டம்! அது வாசலுக்குப் போகும் வழியல்ல. அது உள்ளே போகும் வழியில் உள்ள ஓர் அறை. அவன் உள்ளே சென்றதும் பின்னால் கதவைத் தாழிட்டு மூடும் சத்தம் கேட்டது. நந்து பேசாமல் நின்றான்.

அவனுக்கு எல்லாம் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருந்தது. மேலே என்ன செய்வது என்று தெரியவில்லை. எப்படியாவது அவன் மறுபடியும் அந்தப் பழைய இடத்தில் போய் நின்று கொள்ளவேண்டும். அது ஒன்றுதான் அவன் முதலில் செய்யவேண்டியது. தான் காவல் இருப்பதாக ஜக்கு எண்ணிக்கொண்டிருப்பான் என்று நந்து கவலைப்பட்டான்.

அதனால் அந்த அறையின் பின் கட்டு வழியாக உள்ளே போய் வெளிவர எண்ணி நடந்தான்.

முன்பே தெரிவித்திருப்பது போல பழைய ராஜாக்கள் காலத்து அரண்மனை மாதிரி அந்தப் பங்களா திக்குத் திசை புரியாமல் ஒன்றுக்குள் ஒன்றாக ஒரே அறைகள் மயமாய் இருந்தது. சுற்றிச் சுற்றிப் பழைய இடத்துக்கே வந்துவிட்டான். 'சரி; எப்படி மேலே போவது?' - நந்து தைரியத்தைக் கைவிடவில்லை. வேறு ஒரு கதவைத் திறந்தான். அந்த அறையில் ஒரே பஞ்சும் துணியும் வர்ணக் கிண்ணங்களும் தாறுமாறாகக் கிடந்தன. அதையெல்லாம் நின்று பார்க்க அவனுக்கு நேரமேது? மற்றொரு கதவைத்

திறந்து பார்த்தான். நல்லவேளை! மாடிப்படிகள் அவன் கண்ணில் பட்டன.

இப்போது முன்பு பார்த்த ஆளைக் காணவில்லை. நந்து மாடியில் ஏறினான். உள்ளே போன ஜக்கு என்னவானான் என்று அவனுக்குக் கவலையாக இருந்தது. அதனால் கதவை மெதுவாகத் திறந்து பார்த்தான்.

வராந்தாவெல்லாம் வெறிச் சென்று கிடந்தது. அவன் உள்ளே சென்று கதவை உட் பக்கம் தாழிட்டுக்கொண்டு ஒரு தடவை சுற்றும் முற்றும் பார்த்தான். நாலு பக்கங்களிலும் அறைகள் தென்பட்டன. மாடியின் முகப்பில் ஒரே வெயிலாக இருந்தது. அந்த வெயிலில் யாரோ ஓர் ஆள் நிற்கும் நிழல் மட்டும் விழுந்திருந்தது. அங்கே நிற்பவன் கட்டைச் சுவர் ஓரமாய் நின்றுகொண்டிருக்க வேண்டும். அந்த இடத்தை முன் பக்கத்துச் சுவர் மறைத்தது.

நந்து நின்ற இடம் ஓர் அறையின் வாசலை ஒட்டியிருந்தது. உள்ளுக்குள்ளே ஏதோ 'கர் - கர் - கர்' என்று சத்தம் வேறு கேட்டது.

அவன் மனம் 'மேலே, ஜக்கு வந்தானே, எங்கே? ஜக்குவுக்கு இந்த இடம் எப்படித் தெரிந்தது? இங்கே எதற்காக வந்திருக்கிறான்? எதற்காக என்னைச் செவிடனாக ஆக்ட் பண்ணும்படி சொல்லியிருக்கிறான்? இப்பொழுது எங்கே போயிருப்பான்?' என்று கேட்டது.

திரும்பத் திரும்ப இந்தக் கேள்விகளே அவன் மனத்தில் தோன்றின.

கீழே தடதடவென்று யாரோ நாலைந்து பேர் படிக்கட்டுக்களில் ஏறி வருகிற ஓசை உண்டாயிற்று. இப்பொழுது வெயிலில் தெரிந்த நிழல் அசைந்தது. நந்து மறைந்து கொள்ள இடம் பார்த்தான். பக்கத்துக் கதவைத் திறந்து உள்ளே போகலாமா என்று யோசித்தான். ஆனால் அங்கே ஏதோ முதலில் சத்தம் கேட்டதே— என்று சாவி இடுக்கின் வழியாக உள்ளே பார்த்தான். உள்ளே ஒருவரையும் இப்போது காணோம். மெதுவாகக் கதவைத் தள்ளினான். உள்ளே போய்க் கதவைப் பழையபடி சாத்திக்கொண்டு விட்டான்.

'ணங் - ணங்' என்று கத்திகளின் ஓசையும் கதவைப் படபடவென்று இடிக்கும் ஓசையும் கேட்டன. நந்து அந்த அறையில் கிடந்த ஒரு பெரிய ஜமக்காளத்தைத் தூக்கி அதனடியில் ஒரு மூலையில் படுத்துக்கொண்டான். அடுத்த கணத்தில் அந்த அறையை யாரோ திறந்தார்கள். நந்து மூச்சைக்கூட அடக்கிக் கொண்டான். உள்ளே வந்த ஆள் அந்த வெயிலில் நின்ற ஆளாகத்தான் இருக்க வேண்டும் என்று அவன் நினைத்தான். அரேபியன் நைட்ஸ் கதை மாதிரி இன்று நடக்கும் ஒவ்வொரு விஷயமும் பிரமிப்பாயும் திகைப்பாயும் இருந்தது.

இந்தமாதிரி தீரமான செயல்

களில் ஈடுபடவேண்டும் என்பது ஜக்குவின் ஆசை. அவனோடு சேர்ந்த பிறகு நந்துவுக்கும் அந்த ஆசை ஏற்பட்டுவிட்டது. மிஞ்சிமிஞ்சிப் போனலும் அவனும் ஜக்குவும் சிறு பையன்கள்தானே! அவர்களை யார் என்ன செய்துவிடுவார்கள்! 'போகட்டும்; சிறுபிள்ளைகள்' என்று ஒன்றும் செய்ய மாட்டார்கள். இந்தத் தைரியத்தினல் அவர்களுக்கு எந்தக் காரியத்திலும் பயம் என்பதே ஏற்படுவதில்லை. அதே போலத்தான் இன்றைக்கும்.

ஐந்து நிமிஷம் ஆகியிருக்கும். வெளி வராந்தாவில் கதவு திறந்த ஓசை உண்டாயிற்று. பேச்சுக் குரல்களும் கேட்டன.

நந்துவின் அறையில் நுழைந்த உருவம் அப்படியும் இப்படியும் உலாவிக் கொண்டிருந்தது. நந்து இருப்பதை அந்த ஆள் உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை.

வெளியில் ஒரு குரல், "அடே இந்தப் பக்கத்து வீட்டு அருணசலத்தை ஒரு கை பார்த்துடணும்டா! அவன் அடிக்கடி இங்கே நடமாட்டம் வைச்சிண்டிருக்கான். இப்பக்கூட நாம் வரும்போது அந்த அருணசலமும் இந்தப் பங்களா காவல்காரனும் பேசிக்கொண்டு வெளியில் போனதைப் பார்த்தேண்டா" என்றது.

"ஏண்டா, நேத்து விழுந்த சாவியை எங்கும் காணும்டா" என்றது இன்னொரு குரல்.

"ஆமாம்; இந்த அருணசலம் யாருடா?" என்று கேட்டது மற்ருெரு குரல்.

"அவனு? இந்த ஜக்குப் பயல் இருக்கான் பாரு! அவனுடைய ஊர்க்காரனும். அவன் ஜக்குவோடே மாமாவுடைய பாங்கிலே ஏதோ குமாஸ்தாவாம். நாலு நாளா ஆபீஸுக்குக்கூடப் போகாமே அந்தப் பயல் நம்பளை வேவு பார்க்கிருன். அன்னிக்கு ஜக்குப் பயலை அழைச்சிண்டு அடையாறு பஸ்ஸிலே ஏறினதை நாங்க கூடப் பார்த்தோமே. இருக்கட்டும்; நம்பகிட்ட வாலை ஆட்டினு அப்படியே ஒட்ட நறுக்கிடறது இல்லையா?" என்றது முதல் குரல்.

"அடே, அந்த ரூம் கதவு என்னடா அசையறாப்பலே இருக்கு?" என்ருன் ஒருவன்.

உடனே நந்து இருந்த அறையில் உலாவிக் கொண்டிருந்த ஆள் ஜமக்காளத்தைத் தூக்கினன். நந்துவின் மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது. அடுத்த கணம் நந்துவின் பக்கத்தில் அந்த ஆளும் படுத்துக்கொண்டு ஜமக்காளத்தைப் போட்டு மேலே மூடிக்கொண்டுவிட்டான். இரண்டு பேர் மூச்சுவிடுவது பக்கத்தில் இருப்பவர்களுக்குத் தெரியாமல் போய்விடுமா? ஆனல் இரண்டுபேரும் தெரிந்துகொண்டு பேசாமல் இருந்தார்கள். இரண்டு பேருக்குமே பயம்.

கதவு படார் என்று திறந்துகொண்டது. ஜமக்காளத்துக்குள் ஒளிந்திருந்த இரண்டு பேரும் கட்டையைப்போல ஆடாமல் அசையாமல் கிடந்தார்கள். (தொடரும்)

கிரிக்கெட் கற்றுக்கொள்





(BACK DEFENCE)

பொதுவான ஆரம்ப நிலை

பந்து வரப்போகிறது. அதற்குமுன் ராம்சிங் தயாராக நிற்கிறார்.

போட்டோ: வின்ஸெண்ட்.



நடு விக்கெட்டிலிருந்து பந்து வருகிறது. இப்போது அவர் மட்டையை நேராக வீசி அடிக்க இந்த நிலை உதவியாக இருக்கிறது.

பந்து வரும் திசையில் வலது கால் அகன்றிருப்பதைக் கவனியுங்கள்.



முழங்கை முன்னால் உயர்ந்து இருந்தால்தானே மட்டையை நேராக அடிக்க முடியும்? மட்டையை அவர் நேராகப் பிடித்துக்கொண்டு நிற்கிறார்.



மணிக்கட்டை வளைத்து மட்டையைப் பிடித்துக்கொண்டிருக்கிறார். அப்பொழுதுதான் அடிக்கும்போது மட்டை நேராக இருக்கும்.





ராம்சிங் தலையைக் குனிந்துகொண்டிருக்கிறார். இடதுகை சிறிது இறங்கி இருக்கிறது. பந்து வந்தால் தரையைப் பார்த்து அடிக்க இந்த நிலை சௌகரியமானது.

இடது கால் பாயின்டையும் கவரையும் பார்த்து இருக்கிறது. வலது கால் பௌலர் பக்கம் திரும்பி இருக்கிறது. அப்பொழுதுதான் மட்டையை நேர் கீழாகக் கொண்டுவரச் சுலபமாய் இருக்கும்.

நினைத்ததும் நடந்ததும்

எஸ். சீதா

சுகுணாவுக்கு மிகவும் துக்க மாக வந்தது. இத்தனை வருஷங்கள் தன்னுடன் ஒன்ருகப் படித்து வந்த கமலா இந்த வருஷம் பாஸாவது சந்தேகம்தான் என்பதைக் கேட்டுப் பொருமினுள். இருவரும் ஐந்தாம் பாரம் படித்தார்கள். அடுத்த வருஷம் இருவரும் சேர்ந்தாற்போல் எஸ். எஸ். எல். ஸி. போகலாம் என்றெல்லாம் எண்ணியது வெறும் மனக்கோட்டைதானு என்று வருத்தப்பட்டாள். மூன்று நாட்களுக்கு முன்பு வகுப்பில் அவர்களுடைய டீச்சர் தெளிவாகவும் உறுதியாகவும் கூறியது அவள் நினைவுக்கு வந்தது:

"கமலா! இத்தனை வருஷங்கள் எப்படியோ சுகுணுவுடன் வந்துவிட்டாய். இந்த வருஷம் மட்டும் அது நடக்காது. கால் பரீக்ஷை, அரைப் பரீக்ஷை இரண்டிலும் மிகவும் மோசமாக மார்க்குகள் வாங்கியிருக்கிருய். பரீக்ஷைக்கோ இன்னும் ஒரே மாசம்தான் இருக்கிறது. அதற்குள் நீ படித்துப் பாஸாவாய் என்று எனக்குத் துளிக்கூட நம்பிக்கையே இல்லை."

இதைக் கேட்டதும் கமலா தலையைத் தொங்க விட்டுக்கொண்டாள். ஆனால் சுகுணுவுக்குத் திக்கென்றது. இத்தனை வருஷங்கள் இணை பிரியாமல் படித்த இருவரையும் பிரிக்க ஏன்தான் இந்தப் பரீக்ஷை என்னும் பாதகம் வந்ததோ? இதற்கு ஏதாவது வழி கிடையாதா என்று குழம்பித் தவித்தது அவள் மனம். மூன்று நாட்களாக எதிலும் பற்றில்லாமல் இருந்து வந்தாள் அவள். சுகுணா, கமலா போன்ற சிநேகிதிகளை எங்கேயாவது காணமுடியுமா?

ஒரே நாளில் இருவரும் ஒன்ருகப் போய் ஒரே இடத்தில் உட்கார்ந்து பள்ளிப் படிப்பை ஆரம்பித்தனர். எக்காரணம் கொண்டும் இருவரும் வேறு இடத்தில் உட்காரவில்லை. சிறு வயதிலேயே அனைவரும் பிரமிக்கும்படி இருவரும் உயர்தரப்பள்ளியிலும் சேர்ந்து படித்தார்கள். சுகுணு மிகவும் நன்ருகப் படிப்பாள். வகுப்பிலும் பள்ளியிலும் அவளே முதல்மார்க்கு வாங்குவாள். ஆனால் கமலா சுமாரா

கத்தான் படிப்பாள். சுகுணு வின் சிநேகத்தால்தான் அவள் ஒவ்வொரு வருஷமும் தவருமல் பாஸ் செய்தாள். ஆனல் ஐந்தாம் பாரத்தில் கமலா படிப்பில் சற்று அசட்டையாகவே இருந்து விட்டாள். சுகுணுவுடன் விளை யாடுவதிலேயே காலம் கழித் தாள். சுகுணு எப்படியிருந்தா லும் பாஸாகிவிடலாம். ஆனல் கமலாவை விட்டுவிட்டுத் தான் மட்டும் மேல் வகுப்புக்குச் செல்வதைச் சுகுணு விரும்ப வில்லை. அவளுக்குத் திடீ ரென்று ஒரு யோசனை உதய

மாயிற்று. 'சரிதான்; அப்படிச் செய்வதுதான் நல்லது' என்று தனக்குள்ளாகக் கூறிக் கொண்டாள்.

* * *

"என்ன சுகுணா, பரீக்ஷை நாளன்னிக்கு நடக்கப்போறது. படிக்காமல் இருக்கயே. பரீக்ஷையைக் கோட்டை விட்டுத் தொலேச்சுடாதே" என்றார், சுகுணாவின் தகப்பனார். "இல்லேப்பா நான் எல்லாப் பாடமும் தயார் செய்துவிட்டேன். பரீக்ஷையைப் பற்றி எனக்குக் கவலேயே கிடையாது" என்றாள் சுகுணா.

* * *

பரீக்ஷை ஆரம்பமாகி விட்டது. மூன்று பாடங்களில் பரீக்ஷையும் ஆகிவிட்டது. சுகுணா நன்றாகவே எழுதினாள். கமலாவைப் பார்த்து, "என்ன கமலா! எப்படி எழுதி யிருக்கே?" என்று விசாரித்தாள். "போடி, எனக்கு ஒண்ணும் நம்பிக்கையில்லேடி, நான் பாஸ் ஆவேன்னு. ஏதோ எழுதியிருக்கேன்" என்றாள் கமலா. இந்த வார்த்தைகள் சுகுணாவின் மனத்தில் ஒரு புரட்சிகரமான தீர்மானத்தை உண்டாக்கின.

'சரி; நாம் முன்பு நினைத்தபடி செய்ய வேண்டியதுதான்' என்று நினைத்துக்கொண்டாள்.

பரீக்ஷை முடிந்து லீவு விட்டார்கள். சுகுணாவும் கமலாவும் தங்கள் கிராமத்துக்குச் சென்றார்கள். அங்கே குஷியாகக் காலங்கழித்தார்கள். கமலா சற்று துக்கத்துடன் இருந்தாள். பரீக்ஷையில் தேறாமல் தன்னை விட்டுப் பிரிய வேண்டியதுதான் என்பதை நினைத்துத் துக்கப்படுகிறாள் என்று சுகுணா அவளைத் தேற்றினாள். "கவலைப் படாதே, கமலா. இரண்டு பேரும் ஒண்ணாகவே இருப்போம்" என்றாள்.

* * *

பள்ளிக்கூடம் திறக்க மூன்றே நாட்கள்தான் பாக்கி. சுகுணாவும் கமலாவும் ஊருக்குத் திரும்பினார்கள். ஆச்சு! நாளைக்கு ரிஸல்ட் போடப் போகிறார்கள். சுகுணா சிறிதும் கவலையில்லாமல் இருந்தாள்.

அடுத்த இதழில்

'வாசகன்'

எழுதிய

அற்புதமான

தொடர்கதை

ஆரம்பமாகிறது.

கமலாவுக்குப் பொறுக்கவில்லை. "சுகுணா! ஹெட்மாஸ்டரைப் பார்த்துவிட்டு வருவோமா?" என்றாள். "ஏண்டி அவசரப் படறே? நாளைக்கே போய் ரிஸல்டைப் பார்த்தால் போறாதா?" என்றாள். கமலா வாயை மூடிக்கொண்டாள்.

மறுநாளும் வந்தது. இருவரும் பள்ளிக்குச் சென்றனர். சுகுணா என்றைக்குமில்லாமல் அமைதியாய் இருப்பதைப் பார்த்து, கமலா ஆச்சரியப்பட்டாள். ரிஸல்ட் போர்டைச் சுற்றி ஒரே கூட்டம். கமலா முண்டியடித்துக்கொண்டு போய், போர்டைப் பார்த்தாள். வரிசையாகப் பெயர்களைப் படித்துக்கொண்டே வந்தாள். "சுகுணா! நான் பாஸ்!" என்று தன்னையறியாமல் கூச்சலிட்டாள். இதைக் கேட்ட சுகுணாவுக்கு என்னவோபோல் இருந்தது. அடுத்தாற்போல் பெயர்களைப் படித்துக்கொண்டே வந்தாள் கமலா. "ஐயோ! என்னடி சுகுணா! உன் பெயரைக் காணவில்லை?"

சுகுணா பேச முடியாமல் சிறிது நேரம் சிலைபோல் நின்றாள் மௌனமாக. இருவரும் வீட்டைநோக்கி நடந்தார்கள். பாதி வழியில் கமலா ஆவலை அடக்க முடியாமல், "ஏண்டி எப்படியடி உனக்கு 'பெயில்' ஆச்சு?" என்று கேட்டாள்.

"எல்லாம் உன்னாலேதான். 'பாஸ் ஆகமாட்டேன் போலிருக்கு' என்று நீ சொன்னதும் நான் உன்னைப் பிரியாமல் இருக்கிறதுக்காகப் பரீக்ஷையை மோசமாக எழுதிவிட்டேன்" என்றாள் சுகுணா.

இதற்குப் பிறகு இருவரும் சிநேகிதிகளாக இருக்கவில்லை என்றுதான் எல்லாரும் நினைப்பார்கள். அதுதான் இல்லை. ரொம்ப அந்நியோந்நியமாக இருந்தார்கள்.

ஏழு திருடர்கள்

'ரமணி'

கட்டையன் ஒரு நாவிதன். அவனுக்குத் தன் தொழிலைச் சரிவர செய்யத் தெரியாது. அவன் பெயரைப் போலவே மூளையும் சுத்தக் கட்டை. காது, மூக்கு, கண் எதையாவது பிடித்து வெட்டி விடுவான். காது அறுந்து தொங்கி ரத்தமாக வடியும். கேட்டால், பல்லைக் காட்டிக் கொண்டு, "தெரியாமே பட்டிடுச்சிங்க" என்பான். இப்படிப்பட்டவனை யார் வேலைக்குக் கூப்பிடுவார்கள் ?

ஆனால் அவன் மனைவி பாஞ்சாலி ரொம்ப கெட்டிக்காரி. நாளுக்கு நாள் சோற்றுக்கே இல்லாமல் போவதைக் கண்டு அவள் ஒரு நாள் கணவனைப் பார்த்து, "சும்மா ஒரு வேலைக்கும் துப்பில்லாமே இருக்கியே. போய் ராஜாவைப் பார்த்து ஏதாவது இனும் கேட்டு வாங்கிக்கிட்டு வரப்படாதா? நாம்ப எப்படி ஜீவனம் செய்யறது?" என்று கேட்டாள்.

அப்போது ராஜாதிராஜன் பட்டத்துக்கு வந்திருந்தான். அதை முன்னிட்டு ஏழைகளுக்குப் பொன்னும் மணியும், மனையும் மான்யமுமாக வாரி வழங்கினான். அதனால்தான் பாஞ்சாலி கட்டையனையும் போகச் சொல்லி விரட்டினாள்.

அரண்மனைக்குப் போவதென்றால் கட்டையனுக்குப் பயம். அதைவிட அவனுக்குப் பாஞ்சாலியிடம் பயம் அதிகம். அதனால் எப்படியோ ஒருவிதமாக அரண்மனைக்குள் போய், அரசன் முன்பு மண்டியிட்டு நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினான்.

"என்னடா வேண்டும் உனக்கு?" என்றான் ராஜாதிராஜன்.

"தர்மப் பிரபுவே! ஏதாச்சியும் கொடுங்க" என்றான் கட்டையன்.

ராஜாதிராஜன் கடகடவென்று சிரித்துக்கொண்டே, "ஏதாவது என்றால்?" என்றான்.

"ஆமாம்; ஏதாச்சியும்!" என்றான் கட்டையன்.

"தரிசு நிலம் தரச் சொல்லட்டுமா?"

கட்டையன் பாடு திண்டாட்டமாகப் போய்விட்டது. எப்படியாவது வெளியில் வந்தால் போதுமென்று எண்ணி, "ஓ - அது போதுங்க, மகாராசா!" என்றான். ராஜா அப்படியே கொடுக்கும்படி கட்டளையிட்டான்.

பாஞ்சாலியிடம் இதை வந்து கட்டையன் பெருமையோடு சொன்னான். அவளுக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. தலையில் இரண்டடி அடித்துக்கொண்டு, "தரிசு நிலத்தை நம்மால் எப்படி உழுது பயிரிட முடியும்?

அதற்கு நம்மிடம் மாடும் கலப்பையும், விதையும் ஆளும் வேண்டாமா? அட கடவுளே!" என்று அவனைக் கோபித்துக் கொண்டாள்.

"நீதானே 'ஏதாவது கேளு'ன்னு சொன்னே? அதான் கேட்டேன்" என்றான் கட்டையன்.

பாஞ்சாலி ரொம்ப கெட்டிக்காரியானதால் அவள் மேலே செய்ய வேண்டியதைப்பற்றி யோசித்தாள். கட்டையனைக் கூட அழைத்துக்கொண்டு அந்தத் தரிசு நிலத்துக்குப் போனாள். நாள் முழுவதும் அவர்கள் அந்த நிலத்தில் உட்கார்ந்துகொண்டு யாராவது வழியோடு போகிறவர்கள் தங்களைக் கவனிக்கிறார்களா என்று பார்த்தார்கள். யாராவது கவனித்தால் அவர்கள் பேசாமல் உட்கார்ந்திருப்பார்கள்.

அந்த நிலத்துக்கு அருகில் ஒரு பெரிய புதர் இருந்தது. அந்தப் புதரில் ஏழு திருடர்கள் ஒளிந்திருப்பது வழக்கம். பாஞ்சாலியும் கட்டையனும் இப்படி உட்கார்ந்து பகல் முழுவதும் ஏதோ நிலத்தைப் பார்ப்பதைக் கண்ட அவர்கள் இதில் ஏதோ விஷயம் இருக்கவேண்டும் என்று எண்ணினார்கள்.

சாயங்காலமானதும் அவர்களில் ஒருவன் பாஞ்சாலியிடம் வந்து மெதுவாகப் பேச்சுக் கொடுத்தான். பாஞ்சாலி தான் மகா சாமர்த்தியக்காரியாச்சே. "இதோ பார், இது பெரிய ரகசியம். கண்டவர்களிடம் இதெல்லாம் சொல்ல முடியாது" என்றாள். பிறகு பலத்த பிகுவெல்லாம் பண்ணிவிட்டு, "எங்க தாத்தாவுடைய நிலம் இது. முன்னே பழைய ராஜா காலத்துச் சண்டையின் போது எங்க தாத்தா இங்கே தான் பவுன் நகைகளையும் பணத்தையும் ஏழு பானைகளில் போட்டுப் புதைச்சு வச்சிருக்கார். அதான் எந்தப் பாகத்திலே புதைச்சிருக்கார்னு பார்க்கிறோம். இருட்டிப் போயிட்டுது" என்று சொல்லிவிட்டுக் கட்டையனைப் பார்த்து, "சரி வா, நாளைக்குப் பார்த்துக்கலாம். எங்கே ஓடிப்போகுது?" என்று அவனை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனாள்.

கட்டையனுக்குக்கூட அது உண்மையாய் இருக்கலாமோ என்று சந்தேகமாய் இருந்தது. காலையில் வந்து பார்த்தால், நிலமெல்லாம் பத்து மாடுகள் உழுது போட்டது போலக் கிளறிக் கிடந்தது. பாஞ்சாலி புன்சிரிப்புடன், "பார்த்தியா என் சாமர்த்தியத்தை. பானையைத் தோண்டுவதற்காக நிலத்தையே உழுது போட்டுவிட்டானுக!" என்று சொன்னாள்.

"அப்போ நீ சொன்னது பொய்யா?"

"இல்லாட்டி நூறு ரூபாய் கொடுத்தாலும் இந்தத் தரிசு நிலத்தை யார் வெட்டுவார்கள்?" என்றாள் பாஞ்சாலி.

பாஞ்சாலி அதற்குப் பிறகு அந்த நிலத்தைச் சாகுபடி செய்ய விதை நெல், கொஞ்சம் பணம் எல்லாம் கடன் வாங்கினாள். அந்த வருஷத்து விளைச்சல் பிரமாதமாய் இருந்தது. வீடு முழுவதும் நெல்! கடனையெல்

லாம் தீர்த்துவிட்டுப் பாக்கி நெல்லைக் கொண்டுவந்து சேர் கட்டி வைத்தாள்.

திருடர்கள் பார்த்தார்கள். "அடே! அந்தப் பொம்பிள்ளை நம்பளை எம்மாம் சாமர்த்தியமா ஏய்ச்சுப்புட்டா, பாத்தீங்க ளாடா? இருக்கட்டும். நாம்ப ளும் போய், சரிபாதி பங்கு கேப்போம். என்ன நம்பதானே அவ்வளவு நிலத்தையும் பாடு பட்டு வெட்டினேம்?" என்றான் திருடர் தலைவன்.

மற்றவர்களும் அதுதான் சரி என்றார்கள்.

ஆனால் பாஞ்சாலியிடம் அவர் கள் வந்ததும் அவள் என்ன சொன்னாள் தெரியுமா? "திருட் டுப் பயல்களா! நான் புதையல் இருக்கிறது என்று சொன் னேன். ஆனால் நீங்கள்தான் அதை வெட்டி எடுக்கவில்லையே? உங்களுக்கு நான் எதற்காகப் பங்கு தருவது?" என்றாள்.

"சரி சரி; நீயாகக் கொடுக் காட்டி, நாங்களே எடுத்துக்க றோம். எங்களுக்குத் தெரியும்" என்று சொல்லிவிட்டு அவர்கள் போனார்கள்.

ராத்திரியாயிற்று. திருடர்க ளில் ஒருவன் மெதுவாக வீட்டி னுள் நுழைந்து பதுங்கிக் கொண்டான். இதைப் பாஞ்சாலி கவனிக்காமல் இருப்பாளா? பார்த்தும் பார்க் காததுபோல, புருஷனைப்

பார்த்து, "எல்லாத்தையும் மாங்காய் ஜாடியிலே போட்டுப் பரண்மேல் வைச்சுடு. திருட னுக மாங்கா ஜாடியை எங்கே பார்க்கப்போருனுக?" என்ருள். ஒளிந்திருந்த திருடன், 'அப் படியா சேதி!' என்று வெளி யில் போய் மற்றவர்களுக்கு விஷயத்தைச் சொன்னுன். நடு நிசி நேரத்தில் திருடர்கள் ஒவ்வொருவராக வீட்டில் நுழைந்து பரண்மீது ஏறி அங்கே இருந்த மூன்று மாங் காய் ஜாடிகளையும் எடுத்துக் கொண்டு போனுர்கள்.

ஒருவன் சொன்னுன்: "அடே, எனக்கு மாங்காய் ஊறுகாய் ரொம்பப் பிடிக்கும். அதை யெல்லாம் தூக்கி எறிஞ்சுடா தீங்க!"

இப்படிச் சொல்லிவிட்டு அவன் ஊறுகாய் ஜாடிக்குள் கையை விட்டான். அதற்குள் என்ன இருந்தது தெரியுமோ? அடியில் செங்கல்லைப் போட்டு மேலே அடுப்புச் சாம்பலைப் போட்டு நிரப்பியிருந்தது!

திருடர்களுக்கு எப்படி இருக் கும்! ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. மறுநாள் பொழுது விடிந்ததும் பாஞ்சாலியிடம் பிரமாதமான கோபத்துடன், "ஏ பொம்பளே! இரண்டு வாட்டி எங்களை முட்டாளா அடிச்சுட்டே. மரியாதையா எங்க பங்கைக் கொடுக்கல லேன்னு நாங்க சும்மா இருக்க மாட்டோம். இன்னிக்கும் ஏமாறமாட்டோம்" என்ருர்கள்.

பாஞ்சாலி கலகலவென்று சிரித்துவிட்டு, "மாங்காய் ஊறு காய் தின்னீங்களா? ரொம்ப நல்லா இருந்திருக்குமே!" என்று கேட்டாள். திருடர்கள் கறுவிக்கொண்டே, "இரு, இரு!" என்று சொல்லிவிட்டுப் போனுர்கள்.

பாஞ்சாலி அன்று வெகு ஜாக்கிரதையாக இருந்தாள். இரவு ரொம்ப நேரம் விழித்தி ருந்தாள். மணி ஒன்ருயிற்று; இரண்டும் ஆயிற்று. திருடர் கள் வந்ததாகத் தெரியவில்லை. இனிமேல் எங்கே வரப் போகி ருர்கள் என்று அவள் படுத்துத் தூங்கப் போனுள். ஆனல் சுவருக்கு அடியில் ஏதோ வெளிச்சம் தெரிந்தது. 'ஓகோ, கன்னம் வைத்துவிட்டார்களா! வரட்டும், வரட்டும்' என்று எண்ணிக்கொண்டு சந்தடி செய்யாமல் கட்டையனுடைய கத்தி ஒன்றை எடுத்துக்கொண் டாள். கன்னம் வைத்த இடத் துக்கு அருகில் இருட்டில் பதுங் கிக்கொண்டாள்.

முதலில் ஒரு திருடன் மெது வாகத் தலைப்பக்கமாய் நுழைந் தான். அவ்வளவுதான்! அடுத்த நிமிஷம் அவன் மூக்குப் போய் விட்டது. 'ஆ-ஊ!' என்று அவன் ஊளையிட்டுக்கொண்டே வெளியில் போய் விழுந்தான்.

"சீ, என்னடா முட்டாள் கழுதை, பெரிசா ஊளையிடு கிருய்! யாரானும் முழிச்சுக் கிட்டா என்னடா செய்ய றது?" என்ருன் திருடர் தலைவன்.

"எம்-மூக்கு... எம்-மூக்கு! போயிட்டுது" என்று அவன் மூக்காலேயே அழுதான்.

"மடப் பயல், பாத்து நுழை யப்படாது! அடே கறுப்பு!

நீ போடா" என்றான் தலைவன் இன்னொருவனைப் பார்த்து.

அவன் தலையை நுழைத்தான்!

'சரக்!'

அவன் மூக்கும் கோவிந்தா!

"டேய், அங்கே ஏதாவது கம்பி அல்லது அரிவாள் இருக்கும். பாத்து நுழையுங்கடா" என்றான் தலைவன்.

ஒருவர் பின் ஒருவராக ஆறு பேரும் வந்து திரும்பிவிட்டார்கள். ஆறு பேருடைய மூக்கும் அபேஸ்!

தலைவன் முறை வந்தது. தன் மூக்குக்கும் இதே கதி வந்து விடுமோ என்று பயந்து, "அடேடே! எல்லாருடைய மூக்கும் போய்விட்டது. நான் ஒருவனாவது மிஞ்சியிருந்தால்தானே உங்களுக்கு மருந்து போட்டுக் கட்டலாம்? அதனால் வாங்கடா திரும்பிப் போகலாம். அப்பறம் பார்த்துக்கலாம் இவளை ஒரு கை!" என்றான்.

வந்த வழியைப் பார்த்துக் கொண்டு அந்தத் திருடர்கள் திரும்பிச் சென்றார்கள். பாஞ்சாலியோ அந்த ஆறு பேருடைய மூக்குகளையும் பொறுக்கி ஒரு சிமிழில் போட்டுப் பத்திரமாய் மூடிவைத்தாள்.

கொஞ்ச நாட்கள் ஆயின. திருடர்கள் தலை காட்டவே இல்லை. 'சரி; இனி இவர்களுடைய தொல்லை இருக்காது' என்று நினைத்தார்கள் பாஞ்சாலியும் கட்டையனும். ஆனால்

திருடர்கள் அவ்வளவு லேசில் விட்டுவிடுவார்களா?

கோடைக்காலம் வந்தது. நல்ல நிலா வீசியது. அதனால் பாஞ்சாலியும் கட்டையனும் வாசல் திண்ணையில் கட்டிலைப் போட்டுக்கொண்டு படுத்தார்கள். அப்படியே திருடர்கள் வந்தாலும் நிலாக் காலத்தில் வரமாட்டார்கள் என்ற தைரியம் பாஞ்சாலிக்கு. ஆனால் திருடர் தலைவன் இதுதான் ஏற்ற சமயம் என்று நினைத்து, தன் ஆட்களுடன் புறப்பட்டு வந்தான். இந்தத் தடவை எப்படியும் ஏமாறக் கூடாது என்று அவர்கள் முடிவுகட்டிக் கொண்டு வந்திருந்தார்கள். வாசலில் பாஞ்சாலி கட்டிலைப் போட்டுக்கொண்டு தூங்குவதைப் பார்த்ததும், "அடே, இவளை முதலில் தூக்கிக் கொண்டு போய்விடுவோம். அதற்குப் பிறகு சாவகாசமாய்க் கொள்ளையடித்துக் கொள்ளலாம்" என்றான் திருடர் தலைவன்.

"அதுதான் நல்ல யோசனை!" என்று அப்படியே அலாக்காகக் கட்டிலுடன் தூக்கிச் செல்ல ஆரம்பித்தார்கள் மற்றவர்கள்.

பாதிதூரம் சென்ற பின்புதான் பாஞ்சாலி விழித்துக் கொண்டாள். 'அடடா, மோசம் போனேமே' என்று நினைத்தாள். ஆனால் மூச்சு விடாமல், எப்படித் தப்பிப்பது என்று யோசித்தாள். நல்ல காலமாய் அவர்கள் ஒரு பெரிய ஆலமரத்துப் பக்கமாய்ச் சென்றார்கள். பாஞ்சாலி சிறிதும் தயங்காமல் ஆலம் விழுது ஒன்றை எட்டிப் பிடித்துக் கொண்டு மரத்தில் தொத்திக் கொண்டாள். திருடர்களும் களைப்பாறுவதற்காக அந்த மரத்தடியிலே கட்டிலை வைத்துவிட்டு உட்கார்ந்தார்கள். பாஞ்சாலி முன்ஜாக்கிரதையாகத் தலையணையைப் போட்டு மேலே போர்வையால் மூடி வைத்திருந்தாள். திருடர்கள் அவள் கட்டிலில் தூங்கிக்கொண்டிருக்கிறாள் என்றே நினைத்தார்கள். அடியில் கிடப்பது வெறும் தலையணைதான் என்று தெரிந்திருந்தால் சும்மா இருப்பார்களா?

எல்லாரும் அசதியினால் தூங்க விரும்பினார்கள். திருடர் தலைவன் மட்டும் காவலுக்கு உட்கார்ந்திருந்தான். சிறிது நேரம் ஆயிற்று. மரத்தின் மேலிருந்து மெல்லிய குரலில் பாட்டுக் கேட்டது. திருடர் தலைவன் அண்ணாந்து பார்த்தான். அவனுக்குத் திடீரென்று பழைய கதைகள் ஞாபகத்துக்கு வந்தன. வனதேவதைகள் அர்த்த ராத்திரியில் இப்படி வந்து உட்கார்ந்து பாடும் என்று கதைகள் கேட்டிருந்தான். இதைக் கண்டு பயப்படாமல் தைரியமாய் இருந்தால் அவனை வனதேவதை விரும்பிக் கல்யாணம் செய்து கொள்வாள் என்றும் கேள்விப்பட்டிருந்தான். அவன் இவ்வளவு நாளும் கல்யாணமே செய்துகொள்ளாமல் இருந்ததனால் சபலமும் உண்டாயிற்று. 'சரி; நமக்கு நல்ல காலம் வந்துவிட்டது போலிருக்கிறது.

வனதேவதையினால் நான் பெரிய ராஜாவாகக்கூட ஆகி விடலாம்' என்று எண்ணி மெது வாக மரத்தின் மேல் ஏறினான்.

பாஞ்சாலி வெள்ளைத் துணியினால் மூடிக்கொண்டிருந்தாள். கீழே மரத்தடியில் கட்டில் கிடந்தது. மற்ற ஆறு திருட்டுப் பயல்களும் குறட்டை விட்டுக்கொண்டிருந்தார்கள். தலைவன் மட்டும் மரத்தின்மேல் ஏறி வருகிறான் என்பது தெரிந்ததும் அவள் முகத்தை மூடித் திருப்பிக்கொண்டு பாடிக் கொண்டே இருந்தாள். கொஞ்ச தூரத்திலேயே திருடர் தலைவன் உட்கார்ந்து கொண்டு, "ஏ மோகினித் தேவதையே! என்னைத் திரும்பிப் பாரேன்" என்றான்.

"ஆ! மனிதன்!" என்றாள் பாஞ்சாலி.

"ஆகா, நீதான் எவ்வளவு அழகாய் இருக்கிறாய். இதோ பார். நான் பிரம்மசாரி. கல்யாணமாகாதவன். நீ நினைத்தால் நான் பாக்கியசாலியாவேன். எங்கே, என்னைத் திரும்பிப் பார்!" என்றான் திருடர் தலைவன்.



பாஞ்சாலி தன் மடியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். அங்கே அவள் எப்போதும் தற்காப்புக்காக வைத்திருக்கும் கட்டையனுடைய கத்தி இருந்தது. தைரியத்துடன், "நான் நம்பமாட்டேன். மனிதர்கள் பொய்சொல்லுவார்கள். எங்கே, அருகில் வந்து உன் நாக்கை நீட்டு, பார்க்கலாம். பொய் சொன்னால் நாக்கில் தெரிந்துவிடும்" என்றாள்.

திருடர் தலைவன் தயங்கவில்லை. மெதுவாக அவள் இருக்குமிடத்துக்கு நெருங்கி, "இதோ பார்" என்று நாக்கை நீட்டினான். அவ்வளவுதான்!

அடுத்த கணம் பாஞ்சாலி கத்தியை எடுத்து, சரக்கென்று அவனுடைய நாக்கை நறுக்கி விட்டாள்.

திருடன், "அபேபே" என்று அலறிக்கொண்டு மரத்திலிருந்து தொப்பென்று கீழே விழுந்தான். மற்றவர்கள் இந்தச் சத்தத்தைக் கேட்டு விழித்துக் கொண்டார்கள். பார்த்தால் கீழே தலைவன் விழுந்து கிடந்தான். அவர்கள் பயந்து நடுங்கி அவனையும் கரகர வென்று இழுத்துக்கொண்டு, கட்டிலை விட்டுவிட்டுத் தலை தெறிக்க ஓட்டம் பிடித்தார்கள்.

பாஞ்சாலி இந்தக் கண்டத்திலிருந்தும் பிழைத்தாள். மெதுவாக வீட்டுக்கு வந்தாள்.

கடைசியாகத் திருடர்கள் ராஜாவிடம் போனார்கள்.

நியாயமாகத் தரவேண்டிய பங்கைக் கொடுக்காமல் மோசம் செய்து விட்டாள் பாஞ்சாலி என்று முறையிட்டார்கள்.

ஆனால் பாஞ்சாலியிடம் இதெல்லாம் பலிக்குமா? அவள் நடந்தவற்றையெல்லாம் ராஜாவிடம் கூறினாள்.

திருடர்கள், "பொய், பொய்" என்றார்கள்.

பாஞ்சாலி கையிலிருந்த சிமிழ் ஒன்றை எடுத்து, "இது கூடவா பொய்? இதோ பாருங்கள், இந்த ஆறு பேருடைய மூக்கையும் அந்தத் தலைவனுடைய நாக்கையும்!" என்று ராஜாவிடம் காட்டினாள்.

ராஜா அவளுடைய சாமர்த்தியத்தை மெச்சி ஏராளமாகச் சம்மானம் கொடுத்தனுப்பினான்.

பிறகு பாஞ்சாலியும் கட்டையனும் ராஜாவும் ராணியும் போலக் கவலையின்றி வாழ்ந்தார்கள்.

...



புத்திசாலி

ஒரே ஒரு ஊரில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் தினந்தோறும் நாலு தெருவும் கூடும் இடத்தில் உட்கார்ந்துகொண்டு ராமாயணம் வாசிப்பார். ஜனங்கள் இரண்டணா, நாலணா என்று கொடுப்பார்கள். அதைக் கொண்டு அவர் ஜீவனம் செய்து வந்தார்.

ஒருநாள் அவர் வழக்கம் போல் தெருவில் உட்கார்ந்து ராமாயணம் வாசிக்கத் தொடங்கினார். சுமார் ஒரு மணிநேரம் வாசித்தும் அன்று ஏழெட்டுப் பேர்களுக்குமேல் வரவில்லை. பெரியவருக்குப் பகீர் என்றது. பக்கத்திலிருந்த அவருடைய சிஷ்யனோ, "ஸ்வாமி, கூட்டத்தையே காணோமே - என்ன செய்வது?" என்று கேட்டான்.

பெரியவர் சிரித்துக்கொண்டே, "சிஷ்யா, கவலைப்படாதே. இன்னும் ஐந்து நிமிஷத்தில் ஆயிரம் ஜனங்களை வரவழைத்துவிடுகிறேன், பார்!" என்று சொல்லிவிட்டு, "ஐயோ! அப்பா! சகோதரர்களே, ஓடி வாருங்களேன். பாவி, என் மூக்கை அறுத்துவிட்டானே!" என்று கதறினார். அவ்வளவுதான், அடுத்த நிமிஷம் ஆயிரக்கணக்கான ஜனங்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு, "ஸ்வாமி, ஏன் இப்படிக் கதறுகிறீர்கள்?" என்று கேட்டார்கள்.

பெரியவர் சாவதானமாக, "இப்படியாகத்தானே லக்ஷ்மணபிரானால் மூக்கறுபட்ட சூர்ப்பணகை கதறிக்கொண்டே தன் அண்ணனிடம் சென்றாள்" என்று ராமாயணத்தை வாசித்தார்.

ஜனங்கள் எல்லாரும் அவருடைய சாமர்த்தியத்தை மெச்சினார்கள். அன்றைய வசூல் அபாரம்.

—M. மோகன்



மகுடிக்காரன்

'சோமசன்மா'

பூனையூர், பூனையூர் என்று ஒரு ஊர் இருந்தது. அதற்குப் பூனையூர் என்று ஏன் பெயர் வந்தது தெரியுமா? அந்த ஊரில் பூனைகள் நிறைய இருந்ததால்தான் அந்தப் பெயர் வந்தது. பூனைகள், நிறைய என்றால், ரொம்ப நிறைய! குட்டிப் பூனைகள் பெரிய பூனைகள், பெண் பூனைகள், ஆண் பூனைகள், கறுப்புப் பூனைகள், வெளுப்புப் பூனைகள், சிவப்புப் பூனைகள், மஞ்சள் பூனைகள், இப்படி எங்கே பார்த்தாலும் ஒரே பூனைகள் தான்!

சாப்பாடு வைத்திருந்தால் அடுப்பிலிருந்தே நான்கு பூனைகளாக வெங்கலப் பானையோடு தூக்கிக்கொண்டு போய்விடும். வேஷ்டி, புடைவை, துணிமணிகள் எதுவாயிருந்தாலும் பூனைகள் தூக்கிக்கொண்டுபோய்த் தின்றுவிடும். எங்கே பார்த்தாலும் வீட்டுக்குள் 'மியாவ்', 'மியாவ்' என்று ஒரே பூனைக் குட்டி மயம்தான்!

தெருவிலும் இப்படித் தான். நாலு பூனைகளாகச் சேர்ந்து நாய்களை அடித்துப் போட்டுவிடும். அந்த ஊர் நாய்கள் எல்லாம் பூனை வருகிறது என்றால் ஒரே ஓட்டம்தான்.

இப்படி இருந்தால் அந்த ஊர் மனிதர்கள் என்ன செய்தார்கள் என்று கேட்கிறாய்? அதுதான் அவர்களுக்கும் புரியவில்லை. என்ன செய்வது? தடிக்கம்புகளை வைத்துக் கொண்டு விரட்டிப் பார்த்தார்கள். பலன் இல்லை. ராத்திரி எல்லாரும் தூங்கும் போது அத்தனை தடிக் கம்புகளையும் தூக்கிக்கொண்டு போய்க் குளத்தில் போட்டு விடும் பூனைகள்!

இப்படியிருக்கையில் அந்த ஊருக்கு ஒரு மகுடிக்காரன் வந்தான். மகுடிக்காரன் என்றால் உங்களுக்குத் தெரியுமா? அவன்தான், வாயில் மகுடியை வைத்துக்கொண்டு 'நொய்' என்று ஊதுவானே அவன் தான். அதை ஊதினால் பாம்புகள்கூட வந்து ஆடுமே, அந்த மகுடிக்காரன். அவன் அந்த ஊர்க் கிராம முனிசிப்பிடம் போய்ப் பின்வருமாறு சொன்னான்:

"ஐயா! என்னுடைய மகுடியை ஊதி இத்தனை பூனைகளையும் கூட்டிக்கொண்டு போய்விடுகிறேன். என்ன தருவீர்கள்?"

அதைக்கேட்ட கிராமமுனிசீப்புக்குச் சந்தோஷம் தாங்க

வில்லை. "மகுடிக்காரா! இந்தப் பூனைகள் எல்லாவற்றையும் நீ கூட்டிக்கொண்டுபோய் விட்டால் நீ என்ன கேட்டாலும் தருகிறேன்" என்றார்.

அப்போது அந்த ஊர்க் கணக்குப்பிள்ளை சொன்னான்: "அண்ணா! அப்படிச் சொல்லிவிடாதீர்கள். இந்த மகுடிக்காரன் பொல்லாதவன். அப்படித்தான் இவன் ஓர் ஊருக்குப்போனானும். அங்கே நிறைய எலிகள் இருந்தனவாம். அவைகளையெல்லாம் கூட்டிக்கொண்டு போய்விடுகிறேன் என்று சொல்லி ஏமாற்றி அந்த ஊரில் உள்ள சின்னக் குழந்தைகளையெல்லாம் கொண்டுபோய் விட்டானும்! நான் பேப்பரில் படித்தேன்."

கிராமமுனிசீப்புக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. அவனைப் பார்த்துக் கேட்டார்: "ஏன் அப்பா, உனக்கு என்ன வேணும் என்று கேள். இப்போதே பேசிக்கொள்வது நல்லது."

மகுடிக்காரன்: சாமி! ஒரு ஆயிரம் ரூபா கொடுத்துவிடுங்கள்! அத்தனை பூனைகளையும் கொண்டுபோய், சமுத்திரத்துக்குள்ளே போட்டுவிடுகிறேன்.

முனிசீப்பு: ஆயிரம் ரூபாயா! நூறு ரூபாய் கொடுக்கிறேன். முடித்துவிடு!

மகுடிக்காரன்: அது முடியாது சாமி! ஐந்நூறு ரூபாய் கொடுத்துவிடுங்கள். அதுவும் உங்களுக்காக!

இப்படியாக இரண்டுபேரும் மூன்றுமணி நேரம் பேசியபின்னர் இருநூறு ரூபாய் கொடுப்பது என்று முடிவு செய்தார்கள். அதன்படி மகுடிக்காரன் பிள்ளையார் கோவில் வாசலில் போய் நின்றுகொண்டான். அங்கிருந்து மகுடியை எடுத்து ஊதத் தொடங்கினான். ஊர் ஜனங்கள் எல்லாரும் வேடிக்கை பார்க்க வந்தனர். சிலர் மரத்தின் மேலும், சிலர் சுவர்கள் மேலும் ஏறி உட்கார்ந்துகொண்டு வேடிக்கை பார்த்தனர்.

அரைமணிநேரம் வரையில் மகுடிக்காரன் ஊதினான்.

யாருமே வரவில்லை. ஒரு சின்னப் பூனைக்குட்டிகூட வரவில்லை. "தரலா—தரலா!" என்று அவன் ஊதிக்கொண்டேயிருந்தான். ஜனங்கள் எல்லாரும் மகுடிக்காரன் ஏமாற்றிவிட்டான் என்று நினைத்தார்கள்.

அப்போது 'தடதடா' என்று ஒரு சத்தம் கேட்டது. எங்கேயோ தூரத்தில் பானைகள் உருளும் சத்தம் கேட்டது. அண்டாக்களும் குடங்களும் உருண்டு மோதுவதைப் போல் சத்தம் கேட்டது. கடைசியில், "உஸ்! உஸ்!" என்று ஆயிரம் பேர் கொண்ட பட்டாளம் வந்தால் எப்படிச் சத்தம் கேட்கும், அப்படிச் சத்தம் கேட்டது. கடைசியில் என்ன வந்தது என்று நினைக்கிறீர்கள்? பூனைகள்!

பெரிய பூனை, சின்னப் பூனை, தாத்தாப் பூனை, பாட்டிப் பூனை, குழந்தைப் பூனை, எல்லாப் பூனைகளும் சிப்பாய்களைப் போல் வரிசையாக நடைபோட்டுக்கொண்டு வந்தன. அவர்களுடைய பாஷையில் 'மியாவ், மியாவ்!' என்று ஒரு பாட்டுப் பாடிக்கொண்டே வந்தன.

மகுடிக்காரன் ஊதிக்கொண்டே அவ்விடத்தை விட்டு நகர்ந்தான். அவ்வளவு பூனைகளும் அவன் கூடவே பின்தொடர்ந்து சென்றன. அவன் ஊருக்கு வெளியில் போய்க் கொண்டேயிருந்தான். பூனைகளும் மந்தை மந்தையாகப் போய்க் கொண்டேயிருந்தன.

அவ்வளவுபூனைகளும் எங்கே போய்விட்டன என்று யாருக்கும் தெரியாது. ஆனால் அதற்கப்புறம் அந்த ஊரில் மருந்துக்குக்கூட ஒரு பூனை கிடையாது. எல்லாம் போய்விட்டன! பூனைகள் போனபின் அந்த ஊர் ஜனங்கள் நிம்மதியாக இருந்தார்கள் என்று நினைக்கிறீர்களா? அதுதான்



பெரியவர்: நடுத் தெருவில் நின்றுகொண்டு ஏன் குழந்தாய் அழுகிருய்?

பையன்: என்னுடைய நாய் செத்துப் போய்விட்டது, உ..ஊ.

பெரியவர்: இதற்காக அழலாமா? என்னுடைய பாட்டி கூடப் போன வாரம் இறந்து போய்விட்டாள். அதற்காக நான் அழுதுகொண்டா இருக்கிறேன்!

பையன்: நீங்க பாட்டியைக் குழந்தையிலிருந்து வளர்த்திருந்தாத்தானே தெரியும் உங்களுக்கு!

இல்லை. பூனைகள் போனபின் அந்த ஊர் எலிகளுக்குக் கொண்டாட்டமாய்ப் போய்விட்டது.

எலிகளுக்கும் பூனைகளுக்கும் ஜன்மப் பகை அல்லவா? அதனுல் பூனைகள் இருக்கும் வரையில் ஒரு எலிகூடத் தலை காட்டவில்லை. பூனைகள் போனபின் எலிகள் கொம்மாளம் அடிக்க ஆரம்பித்துவிட்டன. எங்கே பார்த்தாலும் ஒரே எலி மயம்தான். வீட்டுக்கு வெளியில், வீட்டுக்குள், வாசல், திண்ணை, கால் வைக்கும் இடங்களில் எல்லாம் எலிகள்!

கிராம முனிசீப்புக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. பழையபடி மகுடிக்காரனைக் கூப்பிட்டார். "இன்னும் இருநூறு ரூபாய் தருகிறேன். இந்த எலிகளையும் கொண்டுபோய்விடு" என்ருர்.

அப்படியே மகுடிக்காரன் வந்து ஊதினுன். பழையபடியே அத்தனை எலிகளும் அவன்கூடவே போய்விட்டன.

எலிகள் போன பின் அந்த ஊர் ஜனங்கள் சந்தோஷப்பட்டார்கள். ஆனுல் அவர்களுடைய சந்தோஷம் ரொம்ப நாள் இருக்கவில்லை. ஏன் என்ருல், எலிகள் போன பின் ஊர் முழுவதும் ஒரே பாம்புகள் வந்து சேர்ந்தன.

நீளப்பாம்பு, கூழைப்பாம்பு, மலைப்பாம்பு, தண்ணீர்ப் பாம்பு, ஓலைப்பாம்பு, பச்சைப் பாம்பு, சிவப்புப்பாம்பு, நாகப் பாம்பு - இப்படியாக ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் பாம்புகள் வந்து படுத்துக்கொண்டு, "உஸ்! உஸ்!" என்று சீறின. குழந்தைகள் பயந்துகொண்டு

அலறின. பெரியவர்கள் திரு திருவென்று விழித்தார்கள்.

அது ஏன் என்று கேட்கிறீர்கள்? பாம்புகளுக்கு ஆகாரமாய் எலிகள் இருந்தன. எலிகள் போனபின் பாம்புகள் என்ன செய்யும்? ஆகாரம் இல்லாமல் வீட்டுக்குள் வந்து சாப்பாட்டையெல்லாம் தின்றன.

பழையபடியே முனிசீப் மகுடிக்காரனை வரவழைத்து அந்தப் பாம்புகளையும் கொண்டுபோகச் சொல்லலாம் என்றார். ஆனால் ஜனங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. "பூனைகள் போயின; எலிகள் வந்தன; எலிகள் போயின; பாம்புகள் வந்தன. இனிமேல் பாம்புகள் போனால் வேறு என்ன வருமோ?" என்றார்கள் எல்லாரும்.

கடைசியாக ஒரு சாமியார் சொன்ன யோசனையைக் கேட்டு எல்லா ஜனங்களும் பாம்புகளுக்கு ஒரு கோவில் கட்டித் தினம் வீட்டுக்கு உழக்குப் பால் கொடுப்பது என்று முடிவு செய்தார்கள்.

அதே மாதிரி பாம்புக் கோவிலில் ஒவ்வொருவரும் உழக்குப் பால் ஊற்றி வந்தார்கள். உடனே எல்லாப் பாம்புகளும் கோவிலுக்குள் போய் விட்டன. நிறையப் பசும்பால் கிடைக்கிறபோது அவைகளுக்கு என்ன கவலை?

இப்படியாக அந்த ஊரில் பாம்புகள் வீட்டைவிட்டுக் கோவிலுக்குள் போய் வசிக்கத் தொடங்கின.

அன்று முதல் அந்த ஊருக்கு நாகப்பட்டினம் என்ற பெயர் ஏற்பட்டது.

வாத்தியார்: ராமு, நீ பெரியவனானால் பாரதியைப் போல் ஆக விரும்புவாயா? சார்லி சாப்ளினைப் போல ஆக விரும்புவாயா?

பையன்: சார்லி சாப்ளினைப் போலத்தான், ஸார்.

வாத்தியார்: ஏன் அப்படி?

பையன்: சார்லி சாப்ளின் இன்னும் உயிரோடே இருக்கிறாரே, அதனால்தான் ஸார்!

ஈசாப் கதை

நரி முதல் தடவை சிங்கத்தைப் பார்த்தபோது, பயத்தால் ஊளையடித்துக்கொண்டு நடுங்கியது. அடுத்த தடவை பார்த்தபோது, துணிந்து அதை ஒரு கண்ணோட்டம் விட்டது. மூன்றும் தடவை பார்த்தபோது, தைரியமாக எதிரே சென்று, "சிங்கமே, சௌக்கியமாய் இருக்கிறாயா?" என்று க்ஷேமலாபம் விசாரிக்கத் தொடங்கிவிட்டது.

அதிருஷ்ட மோதிரம்

சங்கர்

பணம் இருந்தால் இந்த உலகில் நடக்காத காரியம் ஒன்றுமில்லை. நாங்கள் ஓர் அதிசய மோதிரம் தயாரித்துள்ளோம். அதை வைத்துக்கொண்டிருப்பவர்களுக்குக் கடன் ஏற்படாது. கடன் இருந்தால் ஒழிந்துவிடும். எதிர்பாராத விதமாய்ப் பணம் குவியும். ஒரு முறை பரீக்ஷை செய்து பாருங்கள். மூன்று நாளைக்குள் பயனை அடைவீர்கள். பயனளிக்கா விட்டால் பணம் வாபஸ்.

குறிப்பு: நேரில் வந்தும் பார்க்கலாம்.

விலாசம்:

நெ. 18, உமா பில்டிங்,
டிலக் ப்ரிட்ஜ், பம்பாய்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. ரகுராமன் வின்சென்ட் ரோடு வழியாகச் சென்றுகொண்டிருந்தான். அப்பொழுது அவன் கண்ணில் ஒரு விளம்பரம் தென்பட்டது. அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

"அதிருஷ்ட மோதிரம்"

இருபதாம் நூற்றாண்டு ஜனங்களுக்கு ஒரு சந்தோஷ சமாசாரம்! இந்த உலகில் ஒரு மனிதனுக்கு வேண்டியது பணம்.

மேற்கண்ட விளம்பரத்தைப் படித்த அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. தானும் ஒரு முறை பரீக்ஷை செய்தால் என்ன என்று நினைத்தான். அவன் மாதம் 150 ரூபாய் சம்பளத்தில் ஒரு கம்பெனியில் இருந்தான். இருந்தும் அவனுக்கு வரும்படி போதவில்லை. எப்படிப் போதும்?

'பயனளித்தால் நல்லது. பயனளிக்காவிட்டால் பணம் வாபஸ். இரண்டு விதமும் நஷ்டமில்லை!' என்று தனக்குள்

சொல்லிக்கொண்டே மாய மோதிரக் கம்பெனியை நோக்கி நடந்தான்.

கடையில் ஒரு முதலியார் உட்கார்ந்திருந்தார். அவர் ரகு ராமனைச் சந்தோஷத்துடன் வரவேற்றார். கடையில் ஒரே கூட்டம். இரண்டு மூன்று வேலைக்காரர்கள்தான் இருந்தார்கள். அவர்கள் வாடிக்கைக் காரர்களிடம் அன்பாகப் பேசி வியாபாரத்தை நடத்திக்கொண்டிருந்தார்கள். முதலியார்தான் கடையின் சொந்தக்காரர். அவர் ரகுராமனிடம் ஒரு மோதிரத்தைக் கொடுத்தார். அவனும் அதை வாங்கிக் கொண்டு பணத்தைக் கொடுத்தான். "முதலியார்வாள், பயனளிக்காவிட்டால் என்ன செய்வது?" என்று ரகு கேட்டான். அதற்கு முதலியார் பயனளிக்காவிட்டால் ஆயிரம் ரூபாய் தருவதாகப் பந்தயம் வைத்தார். ரகுராமனும் பந்தயத்துக்கு உட்பட்டான்.

* * *

பதினைந்து நாட்கள் கழிந்தன. ரகுராமனும் மோதிரத்தை எடுத்துக்கொண்டு முதலியாரின் கடையை அடைந்தான். அப்பொழுது அங்கு முதலியாரைத் தவிர வேறு ஒருவருமில்லை. ரகுராமன்தான் முதலில் பேச்சை ஆரம்பித்தான்.

"முதலியார்வாள்! தயவு செய்து மன்னிக்கவும். மோதிரம் பயனளிக்கவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றான்.

அதற்கு அவர், "அதனால் என்ன, மோதிரத்தையும் நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். இந்தாரும், நம் ஒப்பந்தப்படி ஆயிரம் ரூபாய்!" என்று சொல்லிக்கொண்டே பத்து நூறு ரூபாய் நோட்டுகளை ரகுராமன் கையில் வைத்தார். ரகுராமன் மறுத்தும் (எல்லாம் பாசாங்குதான்!) அவர் கேட்கவில்லை. ரகுராமன் மோதிரத்தையும் பணத்தையும் எடுத்துக் கொண்டு முதலியாரிடம் விடை பெற்றுக்கொண்டான்.

நாலைந்து நாட்கள் சென்றன. காலை பத்து மணி இருக்கும். முதலியார் ரகுராமனைத் தேடிக்கொண்டு வந்தார். ரகுராமனுக்கு ஆச்சரியமாக இருந்தது, எப்படி இவருக்குத் தன் விலாசம் தெரிந்தது என்று. இருந்தும் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் அவரைப் புன்னகையுடன் (ஆனால் மனசில் என்னவோ, ஏதோ என்று நினைத்துக் கொண்டே) வரவேற்றான்.

ரகுராமன், "என்ன முதலி

மனைவி: அரை வீசை கத்திரிக்காய் மூணே முக்காலணா, ஒரு புடலங்காய் இரண்டே காலணா, கால் வீசை அவரைக்காய் இரண்டரை அணா - மொத்தம் எவ்வளவு ஆச்சு. கணக்குப் பார்த்துச் சொல்லுங்களேன்!

வாத்தியார்: (பள்ளிக்கூட ஞாபகமாய்) சீ கழுதை! எருமை மாடு! நேற்றுத்தானே சொல்லிக் கொடுத்தேன். அதற்குள்ளே மறந்து போயிட்டயே. ஏறு பெஞ்சுமேலே!

யாரே! எங்கே இப்படி வந்தீர்?'' என்று கேட்டான்.

அதற்கு அவர், "எல்லாம் உம்மைப் பார்க்கத்தான் வந்தேன். மோதிரம் பயனளித்ததா?'' என்று கேட்டார்.

ரகுராமன் திடுக்கிட்டான்.

"பயனளிக்கவில்லை என்று தானே அன்று உம்மிடம் வந்தேன்?'' என்று தட்டுத் தடுமாறிக்கொண்டே பதிலளித்தான்.

"மோதிரம் உம்மிடம்தானே இருக்கிறது?''

"ஆமாம், இருக்கிறது.''

"உமக்கு என்னிடமிருந்து ஆயிரம் ரூபாய் எதிர்பாராத விதமாய்த்தானே கிடைத்தது?''

"ஆமாம்.''

"அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்தீர்?''

"கொடுக்க வேண்டியவர்களுக்கெல்லாம் கொடுத்தேன்.''

"எல்லாக் கடன்களையும் அடைத்துவிட்டீரல்லவா?''

"அடைத்துவிட்டேன்.''

"மீதி இல்லையே?''

"இல்லை.''

முதலியார் சிரித்துக் கொண்டே, "அப்படி வாரும் வழிக்கு. என்னிடமிருந்து உமக்கு எதிர்பாராத விதமாய் ஆயிரம் ரூபாய் கிடைத்தது.

உமக்கு இப்பொழுது எல்லாக் கடனும் தீர்ந்தது. இத்தனைக்கும் காரணம் உம்மிடமிருக்கும் மோதிரமென்று ஞாபகம் இருக்கட்டும். நாம் பந்தயம் வைத்தபடி எடும் ஆயிரம் ரூபாயை'' என்று ஒரு போடு போட்டார்.

ரகுராமன் நிதானமாக, ''முதலியார்வாள், நீங்கள் சொல்லுவதெல்லாம் நியாயம் தான். நான் உமக்குப் பணத்தைத் திருப்பித் தந்துவிடுகிறேன். நான் இந்த நிமிஷம் வரையில் எனக்கு ஒருவரிடமும் கடனில்லை என்றுதான் நினைத்தேன். ஆனால்...'' என்று சொல்லி முடிப்பதற்குள் முதலியார் இடைமறித்து, ''என்ன ஐயா சொன்னீர்? இவ்வளவு நேரம் கடன் இல்லை என்று சொல்லிவிட்டு, இப்பொழுது இரண்டு நிமிஷத்துக்குள் ஒரு கடன் ஏற்பட்டுவிட்டது என்று சொல்ல வருகிறீரே'' என்று கேட்டார்.

''ஆமாம் முதலியார்வாள், இவ்வளவு நேரம் எனக்குக் கடன் இல்லை என்றுதான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுது ஒரு பெரிய கடன் ஏற்பட்டுவிட்டதே. அதுவும் உம்மிடம்! அதற்கு நான் என்ன செய்வேன்?'' என்று கேட்டான்.

''கடன் ஏற்பட்டுவிட்டதா? அதுவும் என்னிடமா? அது உண்மையாயிருந்தால் என் மோதிரம் பயனளிக்கவில்லை என்று ஒப்புக்கொள்ளுகிறேன். நீரும் எனக்குப் பணத்தைத் திருப்பித் தரவேண்டாம்!''

ரகுராமன், ''நான் உம்மிடமிருந்து கிடைத்த பணத்தைக் கொண்டு எல்லாக் கடன்களையும் அடைத்து விட்டேன். என்னிடம் இப்பொழுது காலணாக்கூட இல்லை. நாம் பந்தயம் வைத்தபடி நான் உமக்கு ஆயிரம் ரூபாய் தர வேண்டும். அதுமட்டுமா? நீர் கொடுத்த ஆயிரம் ரூபாயையும் திருப்பித் தரவேண்டும். ஆக மொத்தம் இரண்டாயிரம். என்னிடந்தான் காலணாக்கூட இல்லையே. இப்பொழுது உமக்குத் தர யாரிடமாவது கடன் வாங்கணும், அல்லது உம்மிடம் இரண்டாயிரம் ரூபாய் கடன் வச்சுக்கணும்! அதற்கு நான் என்ன செய்வேன்?'' என்று சிரித்துக்கொண்டே சொல்லி முடித்தான்.

இதைக் கேட்டவுடன் அங்கு நிற்க முதலியாருக்கு என்ன பைத்தியமா?

வாத்தியார்: நாம் இங்கே தூங்கச் செல்லும் சமயத்தில்தான் அமெரிக்காவில் உள்ளவர்கள் படுக்கையைவிட்டு எழுந்திருக்கிறார்கள்.

பையன்: சுத்த சோம்பேறிகள்!

தாமுவின் கனவு

'கீரன்'

"தாமோதரா!" என்று கூப்பிட்டாள் தாயார். நாலைந்து தடவைகளுக்குப் பிறகு, "ஏனம்மா?" என்று அலுப்போடு கேட்டுக் கொண்டே வந்தான் அவன்.

"இத்தனை குரல் கூப்பிட்டேனே, என்ன செய்து கொண்டிருந்தாய்?"

"ஒன்றும் செய்யவில்லை. வெறுமேதான் திண்ணையிலே உட்கார்ந்திருந்தேன்."

அவன் சொன்னது உண்மைதான். தெருவிலே பையன்கள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அவன் வேடிக்கை பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். முதலில் இரண்டொரு குரல் சரியாகக் காதில் விழவில்லை. பிறகு காதில் விழுந்ததும் உடனே எழுந்துபோக வேண்டும் என்று தோன்றவில்லை. 'வேறு எதற்கு? ஏதாவது வேலை சொல்லுவாள். இல்லாவிட்டால் எல்லாரையும் போலக் கை நிறையக் காசைக் கொடுத்துக் கடையிலே போய் உனக்கு வேண்டியதை வாங்கிக்கொள் என்றா சொல்லப் போகிறாள்?' என்று எண்ணினான். அதனால்தான் உடனே எழுந்து வரவில்லை.

"ஆறுமணி ரெயிலிலே உன் மாமா, மாமி எல்லாரும் வருகிறார்களாம். ரெயிலடிக்குப் போய் அவர்களை அழைத்துக் கொண்டுவா!"

தாயார் இப்படிச் சொன்னதும், "ஆகட்டும்" என்று சட்டையை மாட்டிக்கொண்டு அவன் கிளம்பினான். மாமா

வும் மாமியும் வருகிறுர்கள் என்பதற்காக அவன் மனசில் சந்தோஷம் ஏற்படவில்லே.

மாமி பணக்காரி. தான் பணமுடையவள் என்கிற கர்வம் ரொம்ப உண்டு அவளுக்கு. முன்பு ஒரு தடவை வந்திருந்தபோது அம்மாவை அவள் எத்தனே கேவலமாகப் பேசினுள்? அப்படிப்பட்டவள் ஏதுக்கு இப்போது இங்கே வருகிறுளாம்? அவளும் மாமாவும், அவர்கள் குழந்தைகளும் பட்டும் பட்டாடையுமாய் அணிந்துகொண்டு கந்தல் துணியைச் சுற்றிக்கொண்டு நிற்கிற எங்களேப் பார்த்துக் கேலி செய்யவா?

இப்படியெல்லாம் எண்ணிக் கொண்டே கடைவீதியோடு போய்க்கொண் டிருந்தான் அவன். அவனுக்கு வயது அதிகம் ஆகவில்லேதான். ஆனுலும் குடும்ப நிலேயை நன்கு தெரிந்துகொண் டிருந்தான். இருந்தும் இடை[illegible]டையே விளையாட்டுப் புத்தியினுல் மற்றவர்களேப் போலத் தனக்கும் தன் தாயார் நிறையப் பணம் கொடுத்து வேண்டியதை வாங்கிக்கொள்ளச் சொல்லவில்லேயே என்ற எண்ணம் உண்டாகும். பின்னேடு, 'பாவம், அம்மா எங்கே போவாள் பணத்துக்கு? நம் துரதிருஷ்டம் அப்பா போய் விட்டார். இருப்பதை வைத்துக் கஷ்டப்பட்டு எப்படியோ குடும்பம் நடத்துகிறுள் அம்மா' என்றும் தோன்றும். கடைசியில், 'கடவுள் ஏன் எங்களேப் பணக்காரராய் வைக்கக் கூடாது?' என்கிற சிந்தனேயில் இறங்குவான். அந்தச் சிந்தனேக்கு முடிவே இராது.

இப்போதும் அதேபோல ஏதேதோ எண்ணமிட்டுக் கொண்டேதான் கடைவீதியோடு போய்க்கொண் டிருந்தான் தாமோதரன். ஸ்டேஷனுக்குச் செல்ல வேறு குறுக்கு வழி இருந்தது. ஆனுலும் அவன் கடைவீதியோடுதான் சென்றுன். அந்த ஊரிலேயே டப்பா செட்டி கடைதான் மிகவும் பெரியது. அதில் கிடைக்காத சாமான்களே ஒன்றுமில்லே. விதவிதமான பட்டாடைகளும் நூலாடைகளும் அநேகம் ரகங்களில் கடையிலே நிரம்பியிருக்கும். அவற்றை அலங்காரமாக, அழகாகச் செட்டியார் எடுத்து வைத்திருப்பதே ஓர் அபூர்வக் காட்சி. அதை வேடிக்கை பார்க்கவே அநேகம் பேர் கடைமுன் கூடுவர். 'வாங்கத்தான் சக்தியில்லே; பார்க்கவாவது பார்க்கலாம்' என்றுதான் கடைவீதி வழியே சென்றுன் தாமோதரன்.

கடைவாசலில், 'ஜே, ஜே' என்று கூட்டம். மோட்டாரிலும் சைக்கிளிலும் வண்டிகளிலுமாக வருவார்கள்; கடையில் நுழைந்து வேண்டியவற்றை வாங்கி மூட்டை

மூட்டையாகக் கட்டிக் கொண்டு போவார்கள். கடையிலே பளபளவென்று மின்னிய வண்ணம் வரிசையாய்த் தொங்கின பட்டாடைகள். தனது கந்தல் ஆடைகளை ஒரு முறை உற்றுப் பார்த்துக் கொண்டான் தாமோதரன். 'நல்லதாக ஒரே ஒரு நிக்கர், ஒரே ஒரு சட்டை, இது போதும். இதற்குக்கூட வழியில்லையே!' என்று எண்ணிப் பெருமூச்செறிந்தான்.

'கூ' என்ற எஞ்சின் சத்தம் அவன் சிந்தனையைக் கலைத்தது. 'அடடா!' என்று ஸ்டேஷனை நோக்கி ஓட்டமாக ஓடினான். நல்ல வேளை! கூட்ஸ் வண்டி அது. மாமா வருகிற ரெயில் 'லேட்' என்றும் தெரிந்தது. பிளாட்பாரம் டிக்கட் வாங்கிக் கொண்டு போய் அங்கே கிடந்த பெஞ்சியிலே உட்கார்ந்தான். மனக்கண்ணெதிரே டப்பா செட்டி கடை 'ஜகஜ்ஜோதி'யாகக் காட்சியளித்துக்கொண்டே இருந்தது.

'ஒன்று செய்தாலென்ன? அத்தனை பெரிய கடையிலே அவ்வளவு கூட்டத்தின் நடுவிலே எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? அதிகமாக ஒன்றும் வேண்டாம். நல்லதாக ஒரு நிக்கர், ஒரு ஷர்ட்டு,—நைசாகக் கிளப்பிக்கொண்டு வந்துவிட்டால்?...திருடுவது தவறுதான். பாவந்தான்—ஆனால் ஏழையாய் இருப்பவன், ஏராளமாக இருக்கிறவர்களிடமிருந்து எடுத்துக்கொண்டால் என்ன தவறு? அதுவும் ரொம்பவும் கொஞ்சமாகத்தானே?'

இப்படியெல்லாம் எண்ணிற்று அவன் மனம்.

அசதியால் தூக்கம் வந்தது. கண்ணைக் கொண்டுபோய்ச் செருகிற்று.

ஃ ஃ ஃ

விறுக்கென்று எழுந்தான் தாமோதரன். வேகமாக நடந்தான். கடை வீதியை அடைந்தான். டப்பா செட்டி கடையிலே நுழைந்தான். யாரும் பாராத வண்ணம் மெல்ல ஒரு நிக்கரை எடுத்தான். பிறகு ஒரு சட்டை. இரண்டையும் எடுத்துக் கொண்டபின் மெல்லக் கூட்டத்தை விட்டுக் கிளம்ப முயன்முன். அருகில் ஒரு குழந்தை நின்று அழுது கொண்டிருப்பதைக் கண்டு அதற்கு ஆறுதல் சொல்ல அருகில் போனுன். அதன் கழுத்திலே தங்கச் சங்கிலியொன்று 'பளபள' வென்று மின்னிற்று. உடனே தாமோதரனின் மனம் மாறிற்று. 'இதையும் கழற்றி எடுத்துக் கொண்டு போனுல்? விற்ருல் எவ்வளவு பணம் கிடைக்குப்? அதைக் கொண்டு மேலும் எத்தனை நிக்கர்கள் வாங்கலாம்? எவ்வளவு சட்டைகள் தைக்கலாம்?' என்றெல்லாம் எண்ணமிட்டது அவன் உள்ளம். மெல்லக் குழந்தையின் கழுத்திலே கையை வைத்தான்.

"டேய்!"

தாமோதரன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். அருகில் ஒரு போலீஸ்காரன். திருதிருவென்று விழித்த தாமோதரனின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, "வா, ஸ்டேஷனுக்கு" என்ருன் போலீஸ்காரன். தாமோதரன் அழுதான், தொழுதான், கெஞ்சினுன், கதறினுன். 'இனிமேல் இப்படிச் செய்யவில்லை' என்று மன்ருடினுன். போலீஸ்காரன் விடவில்லை. கையைப் பிடித்துக் கரகரவென்று போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்ருன். சட்டை முதலியவைகளைப் பிடுங்கி வைத்துக் கொண்டு பிரம்பினுல், 'சுளீர் சுளீர்' என்று அடித்தான். உதைத்தான். உதை தாளாமல் எட்டுக் குட்டிக்கரணம் அடித்துக்கொண்டு பொத்தென்று விழுந்தான் தாமோதரன். "ஐயோ! ஐயோ!" என்று அலறினுன்.

ஃ ஃ ஃ

"ஏன் தம்பி அழறே?"

பெஞ்சியினடியிலிருந்து அழுதுகொண்டே மெல்ல எழுந்த தாமோதரன் எதிரே நின்ற போலீஸ்காரனைக் கண்டதும் 'ஓ' வென்று வாய் விட்டே அலறிவிட்டான். "இனிமேல் இல்லை, இல்லை" என்று கன்னத்தில் போட்டுக் கொண்டான். அவன் 'பளீர் பளீர்' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டதைக் கண்ட போலீஸ்காரனும்

சுற்றி நின்றவர்களும் கொல்லென்று சிரித்தார்கள்.

அப்போது பேரிரைச்சலுடன் அங்கே ஒரு ரெயில் வந்து நின்றது. அதிலிருந்து தாமோதரன் மாமா, மாமி முதலியோர் இறங்கி வந்தார்கள். கூட்டத்தின் நடுவில் தாமோதரன் கண்ணீரும் கம்பலையுமாய் அழுதுகொண்டு நிற்பதைக் கண்டதும், "ஏண்டா தாமு?" என்றார் மாமா. அப்போதுதான் தாமுவுக்குத்



தைரியம் வந்தது. தான் கண்டதெல்லாம் கனவு என்பதும் புரிந்தது. உடனே, "மாமா!" என்று பாய்ந்து கொண்டு சென்றான். கூட்டம் கலைந்தது.

வண்டியிலே போகிறபோது மாமா பல தடவை என்ன விஷயமென்று தாமோதரனைக் கேட்டார். அவனுக்கு உண்மையைச் சொல்ல வெட்கமாய் இருந்தது. சொல்லாமலிருந்தால் மாமாவும் மாமியும் என்ன நினைத்துக் கொள்வார்களோ என்கிற எண்ணம் ஒருபுறம். ஒரு பாவமும் அறியாதிருக்கிறபோது ஏதோ தவறு செய்துவிட்டுப் போலீஸ்காரனிடம் அகப்பட்டுக்கொண்டு விட்டதாக அவர்கள் நினைத்துக்கொண்டால்?

கடைசியில் உண்மையைச் சொல்லிவிட்டான். வீட்டிலிருந்து கிளம்பினது, கடைவழியே வந்தது, டப்பா செட்டி கடை முன் நின்று பார்த்தது, பிறகு ரெயிலடிக்கு வந்தது, பிளாட்பாரத்துப் பெஞ்சியிலே உட்கார்ந்தது, திருட்டு நினைவு ஏற்பட்டது, தூங்கிப் போனது, கனவு கண்டது, பெஞ்சியிலிருந்து உருண்டு விழுந்தது — எல்லாவற்றையும் ஒன்று விடாமல் அவன் சொன்னபோது மாமாவும் மாமியும் இடி இடியென்று சிரித்தார்கள்.

வீட்டுக்குள் போனதும் மாமா அவனுக்கென்று வாங்கி வந்திருந்த நிக்கர்கள், சட்டைகள் எல்லாவற்றையும் பார்த்தபோது அவனுக்கு ஏற்பட்ட ஆனந்தத்துக்கு அளவேயில்லை. "இதற்குத்தானே தாமு, இத்தனை பாடும்?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார் மாமா. "ஆமாம் மாமா. இனி நான் கனவிலே கூடத் திருட நினைக்க மாட்டேன்" என்றான் அவன்.

'சாக்லெட் கேம்'

இந்த விளையாட்டுக்குக் குறைந்தது எட்டுப் பேராவது வேண்டும். இந்த விளையாட்டில் ஒரு சுவாரஸ்யம் என்னவென்றால் ஆட்டத்தின் முடிவில் தலைக்கு ஒரு சாக்லெட் கிடைக்கும்!

நீங்கள் முதலில் என்ன செய்யவேண்டும் தெரியுமா? எட்டுப் பேர் இருக்கிறீர்கள் அல்லவா? உங்களில் ஒருவன் தலைவனாக நிற்க வேண்டும். எதிரில் வட்டமாகப் பெரிய கோடு ஒன்றைப் போட்டுக் கொள்ளவேண்டும். தலைவன் கையில் இப்போது ஆறே ஆறு சாக்லெட் இருக்கும். அவன் அதை அந்த வட்டத்துக்குள் படத்தில் காட்டியபடி இரண்டடி, மூன்றடி விட்டுப் போட்டுவைத்திருப்பான். மற்ற ஏழுபேரும் இந்தச் சக்கரத்தைச் சுற்றிச் சுற்றி ஓடிக் கொண்டே இருக்கவேண்டும். தலைவன் திடீரென்று ஊதலை ஊதிய வுடன் அவர்கள் கோட்டுக்குள் போகாமல் தலைக்கு ஒன்றாகப் பொறுக்கிக் கொள்ளவேண்டும். ஓடுவது ஏழு பேர்; ஆனால் அங்கே இருப்பது ஆறே ஆறு சாக்லெட்! ஒருவனுக்கு மட்டும் சாக்லெட் கிடைக்காது. சரி; அவனை வெளியிலேயே நிறுத்திவிட்டு மற்ற ஆறு பேரும் ஓடவேண்டும். இப்பொழுது தலைவன் இன்னொரு சாக்லெட்டைக் குறைத்து ஐந்து மட்டும் உள்ளே வைத்திருப்பான். இப்படியே ஓடி ஓடி, தலைவன் ஊதியவுடன் நின்று பொறுக்கிக் கொண்டே வரும்போது கடைசியில் ஒருவன் மட்டும் மிஞ்சுவான் அல்லவா? அவன்தான் ஜயித்தவன்! ஆகையினால் அவனுக்கு மட்டும் இரண்டு சாக்லெட்! மற்றவர்களுக்குத் தலைவன் கையி லிருக்கும் சாக்லெட்டுகளில் ஒவ்வொன்று கிடைக்கும். சாக்லெட் கிடைக்கவில்லையானால் வேறு எதையாவது வைத்துக்கொண்டு விளையாடலாம். இதில் சாக்லெட் முக்கியமல்ல; ஆட்டந்தானே முக்கியம்!

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(S) 131. சௌந்தரராஜன், O. A., சென்னை-2. 132. சௌந்தரம், B. V., பவானி. 133. சௌந்தர லிங்கம், ஞானலிங்கம், K., கம்பளை. 134. சரஸ்வதி, R., வில்லி வாக்கம். 135. சரஸ்வதி, D., மேட்டூர் அணை. 136. சரஸ்வதி, M., பெல்லகாலா. 137. சரஸ்வதி, S., திருச்சிராப்பள்ளி. 138. சரஸ்வதி, R., சுப்பிரமணியம், நாகையா, கல்யாணமகாதேவி. 139. சரஸ்வதி, V., வண்ணார்பேட்டை. 140. சீதா, R., திருக்கோயிலூர். 141. சீதாதேவி, மதுரம், ராதா, E.P., கோபிசெட்டிப்பாளையம். 142. சீதாலக்ஷ்மி, சாந்தா, P.Y., திருச்செங்கோடு, 143. சீதா, K., சென்னை-7. 144. சீதாலக்ஷ்மி, T.R., திம்மனூர். 145. சீதாராமன், N., கோவிந்தராஜன், ஸ்ரீவைகுண்டம். 146. சீதாராமன், வெங்கட்ராமன், K., குமாரகுப்பம். 147. சீதாபதி, M., சென்னை-7. 148. சுபத்திராதேவி, D., பெங்களூர்-1. 149. சுப்புரத்னம், A.K., அவிநாசி. 150. சுபத்திரா, R., புனா-3. 151. சுப்புலக்ஷ்மி, ராமசந்திரன், வெங்கட்ராமன், சம்பத், R., புது டில்லி. 152. சடகோபன், V., பல்லாவரம். 153. சடகோபன், S., நன்னிலம். 154. செல்வராஜ், K., திண்டிவனம். 155. செல்வநாதன், S., பண்ருட்டி. 156. செல்வராஜ், V. புதுச்சேரி. 157. செல்வராஜ், M., விழுப்புரம். 158. சதாசிவம், N., கொழும்பு-14. 159. சதாசிவம், கிரிஜா, C., வெஸ்ட்ஹில். 160. சதாசிவம், கிரிஜா, S.V., அருப்புக்கோட்டை.

(T) 16. தியாகராஜன், R., கோயம்புத்தூர். 17. தியாகராஜன், சேஷகிரி, L., சென்னை-17. 18. திருவேங்கடம், K., சென்னை-1. 19. திருநாவுக்கரசு, B., சென்னை-8. 20. தணிகவேல், வெங்கட்ராமன், P.S., சென்னை-4. 21. தாரகராம், R., சென்னை-11. 22. தாராபாய், N., சென்னை-4. 23. திருஞானம், L., சென்னை-12. 24. துளசிபாய், சென்னை-7. 25. திருநாவுக்கரசு, G., சென்னை-20. 26. தாமஸ் தாஸ், A., தாம்பரம். 27. திருஞானம், S.P., வாளாடி. 28. தோராதஸ்ராடிரிகோ, ஆலந்தலை, சிலோன். 29. தியாகராஜன், S.V., பெண்ணாடம். 30. தியாகராஜன், கண்ணன், S., திருவாரூர். 31. தியாகராஜன், சங்கரன், T.K., மாயவரம். 32. திருமலைசாமி, T.A., ஈரோடு.

(U) 4. உதயமூர்த்தி, R., சீகாழி. 5. உஷாமூர்த்தி, சேலம். 6. உஷா, விமலா, K., சென்னை-17. 7. உஷா, R., சென்னை-17. 8. உமா, முத்து, S., சென்னை-18. 9. உஷாதேவி, M., சென்னை, 4.

(V) 44. விசுவநாதன், A., திருச்சிராப்பள்ளி. 45. வெங்கலக்ஷ்மி, K., சீனிவாசன், நாராயணன், சிவகாசி. 46. விசாலம், G.S., திருநெல்வேலி. 47. வெங்கடேசுவரன், M.R., திருவல்லிக்கேணி. 48. வெங்கடாசலம், P.R., சென்னை-18. 49. வசந்தா, P.S., சென்னை-8. 50. வைத்தீசுவரன், S., சென்னை-14. 51. வேங்கட சுப்பிரமணியன், R., சென்னை-4. 52. வாசுதேவன், P.R., சென்னை-4. 53. வேங்கடவரதன், G., சென்னை-3. 55. விசுவநாதன், சங்கரன், சரஸ்வதி, M., சென்னை-4. 56. வித்யா, சண்முகம், வேதகிரி, M., வில்லிவாக்கம். 57. வேணுகோபாலன், T.V., சென்னை-17.

58. விஜயலக்ஷ்மி, B., சென்னை, 1. 59. வேங்கடேசன், மணி, V., சென்னை-17. 60. விஜயா, T., சென்னை-1. 61. வத்ஸலா, P., சென்னை-4. 62. வாசுதேவன், D., சென்னை-20. 63. வேங்கடசுப்பிரமணியன், K. V., சென்னை-17. 64. வாஸன், ஜயராமன், M.S., புளியந்தோப்பு.

(W) 1. வில்பர்டு குணசேகரன், சென்னை, 4. (Y) 5. யோகநாதன், K., கொடிக்காமம், சிலோன்.

(A) 94. ஆனந்தன், V., சென்னை-21. 95. அனந்தநாராயணன், O. P., சென்னை-14. 96. அபயகுமார், R., சென்னை-4. 97. அனந்தராமன், M., சென்னை-4 98. அண்ணாமலை, P., சைதாப்பேட்டை. 99. அநுராதா, சென்னை-14. 100. அனந்தகிருஷ்ணன், M. S., சென்னை-18. 101. ஆனந்தன், T. R., சென்னை-17. 102. ஆத்மானந்தம், K. K., மதுரை. 103. அனந்தபத்மநாபன், V., திருக்கண்ணமங்கை. 104. அனந்தபத்மநாபன், ஜே., சென்னை-5. 105. ஐயாத்துரை, S., முத்தாண்டிப்பட்டி. 106. அருணாசலம், N., கல்கத்தா-26. 107. அப்புஸ்வாமி, வெள்ளக்கோவில். 108. அனந்தபத்மநாபன், வரதராஜன், கிருஷ்ணவேணி, V.S., சென்னை-4. 109. அபுல்கலாம், M. S., மாவநல்லை. 110. அனந்தநாராயணன், M., சென்னை-5 111. அப்துல் ஹமீது சாகேப், P., வளவனூர். 112. அனந்தகிருஷ்ணன், தயானந்தன், N., சென்னை-17. 113. அநஸூயா, S., கோயம்புத்தூர். 114. அமர்ஜோதி, T. N., மதுரை.

(B) 95. பாமா, C. R., சென்னை-4. 96. பானு, A. N., சென்னை-4. 97. பவானி, H., சென்னை-4. 98. பாலசுப்பிரமணியன், சென்னை-4. 99. பாலா, K., சென்னை-18. 100. பாலகிருஷ்ணன், S., தொரப்பாடி, (N. A.). 101. பாலசுப்பிரமணியன், K. P., கரூர், 102. பானுமதி, மீனாக்ஷி, K. V., சென்னை-19. 103. பாலகிருஷ்ணன், S., சென்னை-7. 104. பாலசுப்பிரமணியன், S., செங்கோட்டை. 105. பாலசரஸ்வதி, K., கோயம்புத்தூர். 106. பாலசுப்பிரமணியன், V., திருவாரூர். 107. பாலசுப்பிரமணியன், T., சென்னை-4. 108. பாலசுப்பிரமணியன், V., நாமக்கல். 109. பாலகுமார், V., புது டில்லி. 110. பாலசுப்பிரமணியன், A., சேத்துப்பட்டு. 111. பன்சி, வைத்தியநாதன், V., தென்னூர், 112. பாஷ்யம், G., மணப்பாறை. 113. பாக்கியம், K., கான்பூர். 114. பாலன், K., (ஊர் எழுதவில்லை.) 115. பாலசுந்தர், V., சென்னை-5. 116. பாலா, கணபதி, மணி, A.,

இங்கே கத்தரியுங்கள்.

கோட்டயம். 117. பாலசங்கம், A., யாழ்ப்பாணம். 118. பாலகிருஷ்ணன், T. R., தென்காசி. 119. பாலசுப்பிரமணியன், R. P., ராசிபுரம்.

(C) 55. சந்திரா, ராஜு, K., தஞ்சாவூர். 56. செல்லம்மா, சங்கரன், S., சென்னை-14. 57. சந்திரராவ், N., சென்னை 15. 58. சந்திரமோகன், M., சென்னை-4. 59. கிறிஸ்டோபர், W., சென்னை - 17. 60. சென்னி கிருஷ்ணன், V. S., சென்னை-2. 61. சென்னையன், ஆண்டிப்பட்டி. 62. செல்லப்பன், K., கல்லல். 63. சொக்கலிங்கம், C., சொக்கிக்குளம். 64. சாருமதி, R., சென்னை-17. 65 சந்திரமௌலி, P. G., சேலம். 66. சந்திரசேகர், சேது பார்வதி, லக்ஷ்மி, S., சென்னை-17. 67. சந்திரசேகரன், S., திருக்கோயிலூர். 68 சந்திரசேகரன், S., வீரவநல்லூர். 69. சிதம்பரம், S. P., அரிமளம். 70. செல்லப்பா, S. சென்னை-4. 71 சந்திரசேகரன், A., சங்கரன்கோயில். 72. சித்ரா, அருந்ததி, கொழும்பு. 73. சின்னசாமி, K. R., கொங்கணபுரம். 74. சொக்கலிங்கம், சண்முகம், R., மஞ்சக்குப்பம். 75. சாயாதேவி, லக்ஷ்மிராகவன், K., கும்பகோணம். 76. சின்னப்பன், S.P. A., ஈரோடு.

(D) 51. தேவராஜன், C. K. சென்னை-1 52. தேவராஜன், P., சென்னை- 21 53. தக்களீசன், S. N., சென்னை - 17. 54. தெய்வநாயகம், S., வண்ணாரப்பேட்டை. 55. தயா, V., சென்னை-4. 56. தினகரசுந்தரம், S., ஆலத்தூர். 57. தர்மலிங்கம், சென்னை-2. 58. தனலக்ஷ்மி, K., கோயம்புத்தூர். 59. தாமோதரன், லக்ஷ்மி நாராயணன், K., குமாரபாளையம். 60. தேவநாதன், சாந்தாபாய், T., திண்டிவனம். 61. தனசேகரன், D. D., வில்லிவாக்கம். 62. தாமோதரன், R., கோயம்புத்தூர். 63. தேவராஜன், P. R., திண்டிவனம். 64. தர்மலிங்கம், S., காணுடுகாத்தான். 65. தேவதாஸ், R., சென்னை - 17. 66. தேவராஜன், T., சென்னை-4. 67. தேவராஜு, பாண்டிச்சேரி. 68. தயாநிதி, அசோகன், திலகவதி, P., மதுரை. 69. தனபாலன், ராமநாத், R., உறையூர்.

(D) 70. துரைக்கண்ணு, P., கோரமண்டல். 71. துளசிதாஸ், நடராஜன், B. V., கோயம்புத்தூர். 72. தர்மன், K., பொன்னூர். 73. துரைரத்தினவதி, சிலோன்.

(E) 12. ஈசுவரன், D V., சென்னை - 18. 13. எதிராஜன், E. S., சென்னை-2. 14. எபனசர், கட்வின், சென்னை-3. 15. ஏழுமலை M., சென்னை-17.

(மீதி அடுத்த இதழில்)

பவழவல்லி

கி. ரா.

12. கல்யாணமும் கனவும்

அன்னக்கிளியும் சுந்தரமும் யானையை விட்டு இறங்கியதும் பவழ லோகத்து ராஜாவும் அவனுடைய குமாரி பவழவல்லியும் பரிவாரங்கள் புடைசூழ, சுந்தரத்தை வரவேற்றார்கள். மேளவாத்தியங்களும் சங்கு வாத்தியங்களும் முழங்கின.

பவழவல்லியின் கையில் இருந்த மாலையை வாங்கி ராஜா சுந்தரத்தின் கழுத்தில் போட்டான். போட்டதும் பின்வருமாறு சொன்னான்:

"ஐயா, எங்களுடைய செல்வப்புதல்வியான பவழவல்லியைக் காப்பாற்றி எங்களுக்கு உயிர்ப்பிச்சை அளித்தீர்கள்! உங்களை என் நாட்டுக்கு வரவேற்கிறேன்!"

சுந்தரத்துக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. கடைக்கண்ணால் பவழவல்லியைப் பார்த்தான். அவளுடைய முகத்தில் ஆனந்தம் தாண்டவமாடிற்று.

அப்போது ஒரு வெள்ளிமயமான ரதம் வந்து நின்றது. சுந்தரத்தைப் பன்னிரண்டு உயரமான நத்தைகள் இழுத்தன. அவைகளின் ஓடுகள் தங்கமயமாக மின்னின. அதை ஒரு மச்சப்பெண் ஓட்டினாள்.

அந்த ரதத்தில் மூன்று உயரமான ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. நடுவில் பவழவல்லி ஏறிக்கொண்டாள். ஒரு பக்கம் ராஜாவும் இன்னொரு பக்கம் சுந்தரமும் ஏறிக்கொண்டார்கள். ரதம் மெதுவாக அசைந்து அசைந்து கிளம்பிற்று.

ரதத்துக்கு முன்னால் மச்சப் பெண்கள் பன்னிரண்டு பேர் நாட்டிய உடை அணிந்து நாட்டியம் ஆடிக்கொண்டே போனார்கள். அவர்களுக்கு முன்னால் ஆண்கள் வாத்தியம் வாசித்துக்கொண்டே போனார்கள்.

வழியெல்லாம் பலவிதப் புஷ்பங்களால் தோரணங்கள் கட்டப்பட்டுத் தொங்கின. சுந்தரம் ஆச்சரியத்தால் பிரமித்துப் போய்ப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தான்.

கடைசியில் ஊர்வலம் ஒரு பெரிய புஷ்பப் பந்தலுக்கு முன்னால் வந்ததும் நின்றது. அந்தப் பந்தலின் அலங்காரங்கள் நூதனமாகவும் அதிசயிக்கும்படி அழகாகவும் இருந்தன. பவழங்களாலேயே கால்கள் நட்டிருந்தன. மேலே

கூரைக்குப் பதிலாகத் தாமரையின் இதழ்கள் வேயப்பட்டிருந்தன. பல்வேறு புஷ்பங்களால் செய்யப்பட்ட சிங்கார வளைவுகளும், சித்திர வேலைப்பாடுகளும் கண்ணைக் கவரும்படி இருந்தன. இன்னும் நல்முத்துக்களைக் கொண்டு கட்டப்பட்ட அசைந்தாடிகள் அங்கங்கே சரம் சரமாகத் தொங்கின.

ரதத்தைவிட்டு இறங்கிய சுந்தரம் இந்த அலங்காரங்களைக் கண்டு பிரமித்துப்போய் அப்படியே நின்றான்.

''உள்ளே போகலாம், வாருங்கள்'' என்று பவழராஜா கூப்பிட்டதும் திடுக்கிட்டு அவரைப் பின்தொடர்ந்தான்.

அங்கே பந்தலின் மத்தியில் கண்ட காட்சி எல்லாவற்றையும் தூக்கியடிப்பதாயிருந்தது.

பந்தலின் நடு மையத்தில் பத்து அடி சதுரத்துக்கு ஒரு பளபளப்பான மேடை. அது ஒரே ஸ்படிகக் கல்லில் செய்யப்பட்டது. தூரத்திலிருந்து பார்ப்பதற்கு ஜலம் தேங்கிய ஒரு குளத்தைப்போல் காட்சியளித்தது. அந்த மேடையின்மேல் பிறைச் சந்திரன் உட்கார்ந்து கொண்டிருந்தது. வானத்தில் உலவும் பிறைச்சந்திரன் ஒரு ஏரியின்மேல் வந்து உட்கார்ந்தால் எப்படி இருக்கும்; அப்படியேதான் இருந்தது சுந்தரத்துக்கு.

''இதென்ன சந்திரனா?'' என்றான் சுந்தரம் ஆச்சரியத்துடன்.

''அது நிஜச் சந்திரன் அல்ல; எங்கள் பொற்கொல்லர்கள்



வெள்ளியில் செய்த பிரதிமை அது. சந்திரனுடைய பொம்மை'' என்றாள் பவழவல்லி சிரித்துக்கொண்டே.

''இங்கே எதற்காக வைக்கப்பட்டிருக்கிறது?'' என்று கேட்டான் சுந்தரம்.

''எங்கள் குல ஆசாரப்படி எங்களுடைய குல தெய்வமான சந்திர பகவான் முன்னிலையில்தான் விவாகம் செய்வது வழக்கம்'' என்றான் பவழ ராஜா.

''விவாகமா, யாருக்கு?''

''ஏன், பவழவல்லிக்குத்தான்!''

''மாப்பிள்ளை யார்?''

மனசில் எழுந்த வேகத்தில் கேட்டான் சுந்தரம். அதற்கு ராஜா சொன்ன பதில் அவனைத் திடுக்கிட வைத்தது.

''அதென்ன அப்படிக் கேட்கிறீர்கள்? பவழவல்லியை யார் காப்பாற்றினார்களோ அவர்கள்தானே அவளை மணக்க வேண்டும்?'' என்றான் அவன்.

சுந்தரம் பவழவல்லியை முதல் முதலில் பார்த்ததுமே அவள்மேல் ஆசை கொண்டான். உள்ளூற அவளை மணந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை அவனுக்கு உண்டு. ஆனாலும் கல்யாணம் என்று நேருக்கு நேராக வந்ததும் அவனுக்கு ஏதோ மனசுக்குப் பயமாக இருந்தது. அப்பாவையும் அம்மாவையும் கேட்காமல் எப்படிக் கல்யாணம் செய்துகொள்ளுகிறது? அன்றியும் கல்யாணம் ஆகிவிட்டால் பவழவல்லியைப் பூலோகத்துக்குக் கூட்டிக்கொண்டு போக முடியுமோ, முடியாதோ? இல்லை, அவனே இனிமேல் பூலோகத்துக்குப் போகாமல் அங்கேயே இருக்கும்படி வந்துவிடுமோ என்னவோ? இப்படியெல்லாம் அவனுடைய மனத்தில் எண்ணங்கள் ஓடின. அவன் ஒன்றும் பதில் சொல்லாமல் அப்படியே அந்த வெள்ளிச் சந்திர பிம்பத்தைப் பார்த்துக்கொண்டு நின்றான்.

அப்போது, ''மாப்பிள்ளை!'' என்று ஒரு பெண்குரல் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பி



ஞன். அவனுக்குப் பின்னல் அன்னக்கிளி சிரித்துக் கொண்டு நின்ருள்.

"அதோ எதிரில் பாருங்கள்!" என்ருள் அவள். சுந்தரம் பார்த்தான்.

எதிரில் பெரிய மீனைப் போன்ற ஒரு வாகனம் வந்தது. அது சுத்தத் தங்கத்தினல் செய்யப்பட்டதைப் போல் மின்னியது. அதன் மேல் ஜகஜ்ஜோதியாய் மின்னிக்கொண்டு பவழவல்லி அமர்ந்திருந்தாள். அவள் உடல் முழுவதும் பொன்மயமாய் மின்னிற்று. அவளுடைய தலையில் ஒரு மெல்லிய மரகதக் கிரீடம் சுடர் விட்டது. அவளுடைய வலது கையில் ஒரு வைரச் செங்கோலைப் பிடித்திருந்தாள். எல்லா அலங்காரங்களையும்விட அவளுடைய முகத்தில் ஜொலித்த புன்னகை அவன் உள்ளத்தைக் கவர்ந்தது.

அந்த மச்சவாகனத்துக்கு முன்னல் பெண்கள் புஷ்பங்களை வாரி இறைத்துக்கொண்டே வந்தார்கள். சுந்தரம் வியப்புடன் பார்த்துக்கொண்டு நின்ருன்.

"அதோ அந்த வைரக்கோல்தான் பவழலோகத்தின் செங்கோல். அதை உன் பாதத்தடியில் வைத்துவிட்டு வணங்கப் போகிருள். தன் தந்தைக்குப் பின் நீதான் இந்த நாட்டு மகுடத்தை ஏற்கவேண்டும் என்று அதற்குப் பொருள். அவளுடைய இடதுகையில் ஒரு சங்கு மோதிரம் அணிந்து கொண்டிருக்கிருள். அதை உன் கை விரலில் அணிந்துவிட்டால் விவாகம் முடிந்துவிட்டது.

அப்பா: நான் கொடுக்கிற காசையெல்லாம் செலவழிக்காமே நீங்க உண்டியல்லே போட்டு வைக்கணும், தெரியுமா?

ராஜா: அது வேண்டாம், அப்பா. ரொம்ப மோசமான வழக்கம். குழந்தைகளை இப்பவே பிடிச்சுக் கருமியாகும்படி செய்துவிடும்.

கிட்டு: ஆமாம், அப்பா. உங்களையும் உண்டியலை உடைச்சுத் திருடறவாளாப் பண்ணிவிடும்.

சந்திரபகவானுக்கு முன்னிலையில் அந்த மோதிரத்தை அணிந்துகொண்டு விட்டால் ஆயுள் முழுவதும் அவளை விட்டுப் பிரியக் கூடாது. என்ன வந்தாலும் உயிர் உள்ள வரையில் அதைக் கழற்றக் கூடாது" என்று அவன் காதருகில் வந்து சொன்னுள் அன்னக்கிளி.

வரவர மேளவாத்தியங்கள் முழங்கின. சங்கு வாத்தியங்கள், "பம் பம்" என்று பூமி அதிரும்படி ஒலித்தன. பவழவல்லி மிகவும் சமீபத்தில் நெருங்கி வந்துகொண்டிருந்தாள். சந்திரபகவான் முன்னிலையில் போடப்பட்ட வாசனைப் புகை மேலே படர்ந்து கமகமவென்று நறுமணம் வீசிற்று. அதற்குப் பக்கத்தில் பவழ ராஜா களிப்புடன் தன் மகளைப் பார்த்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தான்.

பவழவல்லி மச்ச வாகனத்தை விட்டு இறங்கிவிட்டாள். பெண்கள் சந்திரனைத் துதிசெய்து கோஷ்டியாகப் பாட ஆரம்பித்தார்கள். இன்னும் சில விநடிகள்தான்.

அதன் பிறகு சுந்தரத்துக்கு விவாகம் நடந்துவிடும். அவன் நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது.

அப்போது திடீரென்று எங்கிருந்தோ ஒரு பயங்கரமான அலறல் சத்தம் கேட்டது. ''ஹ! ஹ! ஹா!'' என்று பேரிடி போல் அந்தச் சத்தம் முழங்கியதும் வாத்தியங்கள் எல்லாம் திடீரென்று நின்றன. பெண்கள் பாடுவதை நிறுத்திவிட்டு விழித்தனர். பவழ ராஜா தாவிக்கொண்டு முன்னால் வந்தார். பவழவல்லி கையில் உள்ள செங்கோலைப் பொத்தென்று கீழே போட்டுவிட்டுப் பயத்தால் விழித்தாள்.

சுந்தரத்துக்கு ஒன்றும் புரியவில்லை. அப்போது வெளியிலிருந்து நாலைந்து வேலைக்காரர்கள் ஓடி வந்தார்கள். அவர்கள் சத்தத்தின் காரணத்தை அறிவித்தார்கள். கருநாகன் வந்துவிட்டான்! பவழவல்லியின் சாபத்துக்குக் காரணமாயிருந்த கருநாகன்! அவளுடைய கல்யாணத்தை நிறுத்திவிடுவதற்காக வந்துவிட்டான்!

அதைக் கேள்விப்பட்ட பவழ ராஜாவுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அவனுடைய மந்திர வித்தைக்கு முன்னால் அவர் ஒன்றும் செய்ய முடியாது.

பெண்கள் மூலைக்கு ஒருவராக ஓட்டம் பிடித்தனர். பவழவல்லி சுந்தரத்துக்குப் பக்கத்தில் வந்து ஒண்டிக்கொண்டாள். சுந்தரத்துக்கு மயக்கம் வருவது போல் இருந்தது.

அன்னக்கிளி சொன்னாள்: ''சுந்தரம், பயப்படாதே!

அப்பா: பையன்களும் பெண்களும் அடிக்கடி பள்ளிக்கூடங்களில் சொல்லும் இரண்டு வார்த்தைகளைச் சொல்லு, பார்க்கலாம்.

பையன்: எனக்குத் தெரியாதே.

அப்பா: அப்பாடா! இந்தக் கேள்விக்குத்தான் நீ சரியான பதிலைச் சொல்லியிருக்கிறாய்!

உங்கள் இருவரையும் நான் காப்பாற்றி விடுகிறேன். என் கூட வாருங்கள்!"

சுந்தரத்துக்குக் கால் எழும்பவில்லை. அவள் கூடப் போவதற்கும் பயமாயிருந்தது. இன்னும் எந்த விதமான ஆபத்துக்களில் மாட்டிக் கொள்ள வேண்டுமோ?

அப்பொழுது, "படீர்" என்று ஒரு வெடி வெடித்ததைப் போல் சத்தம் கேட்டது. அந்தப் பந்தல் முழுவதும் ஒரே புகைப் படலமாகச் சூழ்ந்தது. சுந்தரத்துக்குக் கண்ணே தெரியவில்லை. அவன் நினைவே மயங்கியது...

* *

சுந்தரம் திடீரென்று கண்ணை விழித்துப் பார்த்தான். அவனை யாரோ, "சுந்தரம்! சுந்தரம்!" என்று கூப்பிடுவது காதில் தெளிவாக விழுந்தது.

அவன் கண்ணைத் திறந்தான். அவனுடைய புத்தி ஒரு நிதானத்துக்கு வந்ததும் அவனைத் தகப்பனார் தட்டி எழுப்புவது தெரிந்தது.

மேலே நிமிர்ந்து பார்த்தான். ஆகாயத்தில் பூர்ண சந்திரன் மிதந்துகொண்டிருந்தது. சமுத்திரத்தில் அலை கொந்தளித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது தான் இத்தனை நேரம் கண்டது எல்லாம் ஒரு கனவு என்று அவன் உணர்ந்தான்! அவனால் நம்ப முடியவில்லை. எல்லாம் கண்ணெதிரில் நடந்தது போலல்லவா இருந்தது!

"டேய்! என்னடா இங்கே வந்து படுத்துத் தூங்கி விட்டாய்? உன்னை எங்கெல்லாம் போய்த் தேடுகிறது?" என்றார் அவனுடைய தந்தை.

அவன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருந்தான். தந்தையின் கூட வீட்டுக்கு நடந்தான். அவன் கால்கள் தான் நடந்தனவே ஒழிய அவனுடைய மனம் எல்லாம் பவழலோகத்திலேயும், அங்கே அவன் கண்ட அதிசயங்களிலுமே லயித்திருந்தது.

அவன் சொன்னாலும் அதை யாரும் நம்பமாட்டார்கள். பாலு, "போடா புளுகுணி" என்று இன்னும் ஓர் உதை கொடுப்பான். அவனுடைய தோழர்களோ, "கிராக்கு!" என்பார்கள். ஆனால் தங்கச்சி மட்டும் அவன் சொல்வதை நம்புவாள். அவளுக்கு மட்டுமே தான் கண்ட அற்புதங்களை அவன் சொல்லுவான்.

முற்றும்

ஜபம் பலித்தது

கி. வா. ஜகந்நாதன்

கண்ணபிரான் முதலியாருக்கு இரண்டு பிள்ளைகள். இரண்டு பேரும் வயசு வந்து உத்தியோகம் பார்த்தார்கள். கண்ணபிரான் முதலியாருடைய மனைவி இறந்து போய்ப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர் சம்பாதித்துச் சேர்த்த பணத்தை இரண்டு பிள்ளைகளுக்கும் பங்கிட்டுக் கொடுத்தார். ஒவ்வொரு பிள்ளையின் வீட்டிலும் சிலசில காலம் மாறி மாறி இருந்து வரலாம் என்று எண்ணினார்.

பிள்ளைகள் தனித்தனி வீடுகளில் வசித்து வந்தார்கள். மூத்தபிள்ளையாகிய முருகன் வீட்டில் கண்ணபிரான் முதலியார் இருந்து வந்தார். ஒரு நாள் முருகனுடைய மனைவி தன் புருஷனுடன் ஏதோ பேசிக்கொண்டிருந்தாள். கண்ணபிரான் முதலியாருடைய காதில் விழும்படி வேண்டுமென்று உரக்கப் பேசினாள். "மாமாவை உங்கள் தம்பி வீட்டில் போய்ச் சிலகாலம் இருக்கச் சொல்லுங்களேன். எனக்கு உடம்பு சரியில்லை. அவரை நன்றாகக் கவனிக்கவே முடியவில்லை. உங்கள் தம்பியின் மனைவி நல்ல பலசாலி. அவருக்கு வேண்டியபடியெல்லாம் உபசாரம் செய்வாள்" என்றாள்.

எப்படியும் முருகனின் தம்பி வேலன் வீட்டுக்குப் போய் ஒரு மாதம் இருக்கத்தான் எண்ணியிருந்தார் முதலியார். அதற்குள் இந்த வார்த்தைகள் காதில் விழுந்தவுடன் அவருக்கு யோசனை வந்துவிட்டது. 'இவள் தனக்கு உடம்பு சரியில்லை என்று சொல்கிறாளே; நன்றாகத்தானே இருக்கிறாள்? விடிந்தெழுந்தால் எங்கெங்கே போய் விட்டுவருகிறாள். அதற்கெல்லாம் உடம்பு ஒன்றுமில்லையோ?' என்று எண்ணினார். 'இனி இவர்களாகக் கூப்பிட்டாலொழிய இங்கே திரும்பி வரக் கூடாது' என்று நிச்சயம் செய்துகொண்டு அன்றைக்கே வேலன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்.

அங்கே ஒரு மாதம் இருந்தார். வழக்கம் போல் அவர் முருகன் வீட்டுக்குப் போவாரென்றே வேலனும் வேலன் மனைவியும் நினைத்திருந்தார்கள். ஆனால் முதலியாரோ அங்கேயே இருந்துவந்தார். ஒரு நாள் வேலன் தகப்பனாரிடம் வந்தான்; "ஏன் அப்பா, நீ இங்கேயே இருந்துவிட்டாயே! உன்னைக் காணாமல் அண்ணன் வருந்தமாட்டானா?" என்று கேட்டான். "அவனுடைய வேலையில் என்னைப்பற்றி நினைக்க அவனுக்கு ஏதப்பா நேரம்?" என்று முதலியார் சொன்னார். வேலன், "எனக்கு மாத்திரம் வேலை இல்லையா?

உனக்கோ வயசாகிவிட்டது. மாறிமாறி எங்கள் இரண்டு பேர் வீட்டிலும் இருப்பதை விட அண்ணன் வீட்டில் இருப்பதே நல்லது. கடைசிகாலத்தில் மூத்தபிள்ளையின் மடியில் தலை வைத்துச் சாவதற்கே பெரியவர்கள் ஆசைப்படுவார்கள்'' என்று சொன்னான். முதலியாருக்கு மிகவும் வருத்தம் உண்டாகி விட்டது. தம் பிள்ளையே நேரில் வந்து இப்படிச் சொன்னால் என்னதான் செய்வார்! இனி மேல் எங்கே போய் இருப்பது?

அவருடைய நெருங்கிய நண்பர் ஒருவர் அந்த ஊரில் இருந்தார். அவரிடம் தம்முடைய தர்மசங்கட நிலையைச் சொன்னார். அந்த நண்பர், "நீ பேசாமல் என் வீட்டிலே இருந்துவிடு. அந்தப் பயல்களை உன் காலில் வந்து விழச் செய்கிறேன் பார். நான் சொல்கிறபடி மாத்திரம் நீ

2/1778

கேட்கவேண்டும்'' என்று சொன்னார். முதலியார் தம் நண்பருடைய இஷ்டப்படியே நடப்பதாகச் சொன்னார்.

நாலு நாள் கழித்து முதலியாருக்குத் தனியே ஓர் அறையை ஒழித்துக் கொடுத்தார். ஒரு பெட்டியும் இரண்டு கணக்கு நோட்டுகளும் கொடுத்தார். அன்று முதல் முதலியார் மாத்திரம் சில மணி நேரம் அந்த அறைக்கு உள்ளே சென்று தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு நோட்டுகளைப் புரட்டுவார். பெட்டியிலிருந்து எதையோ எடுப்பார், வைப்பார். கலகலவென்று ஓசை கேட்கும். பிறகு வெளியிலே வந்து கதவைப் பூட்டிவிட்டு ஊராருடன் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருப்பார். எப்போதும் அவர் இடுப்பில் ஒரு சாவி கொத்துத் தொங்கும். நாளடைவில் ஊருக்குள் ஒரு வதந்தி பரவியது. கண்ணபிரான் முதலியார் தனியே பணம் வைத்திருக்கிறாரென்றும், தனியே அறையில் இருந்துகொண்டு அதைப் பாதுகாப்பதோடு, அவருடைய நண்பர்மூலம் லேவாதேவி செய்துவருகிறார் என்றும் ஊரார் பேசிக்கொண்டார்கள்.

ஒரு நாள் முதலியாரின் மூத்தபிள்ளை அவரிடம் வந்தான். "என்ன அப்பா இது? மலைபோல இரண்டு பிள்ளைகளைப் பெற்றுவிட்டு ஊரார் வீட்டில் வந்து இருக்கிறாயே! இது நியாயமா?'' என்று அழாக்குறையாகக் கேட்டான்.

"உன் பெண்டாட்டி, பாவம், உடம்பு சரியில்லாமல் இருக்கிறாள். அவளுக்கு ஏன் அப்பா தொந்தரவு கொடுக்க வேண்டும்?'' என்றார் முதலியார்.

"அவளும் நீங்கள் வரவில்லையே என்று வருத்தப்படுகிறாள்'' என்றான் முருகன்.

"சரி வருகிறேன்; இரண்டு நாள் ஆகட்டும்'' என்றார் முதலியார்.

அடுத்த நாள் முருகன் தன் மனைவியையும் அழைத்துக் கொண்டு வந்தான். இருவரும் தகப்பனார் காலில் விழுந்தார்கள். "நாங்கள் ஏதாவது தவறு செய்தாலும் மன்னித்துவிட்டு எங்கள் வீட்டுக்கு வர வேண்டும்'' என்று அழுதார்கள். முதலியார் நண்பர் அங்கே வந்தார். அவர் சமாதானம் செய்து முதலியாரை முருகன் வீட்டுக்கு அனுப்பினார்.

அங்கே முதலியாருக்கு ஆசார உபசாரம் நடைபெற்றது. முதலியார் ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரமாவது தம் நண்பர் வீட்டுக்கு வந்து தம் அறைக்குள் போய் இருந்துவிட்டு வருவார்.

ஒரு வாரம் ஆயிற்று. அவருடைய இரண்டாம் பிள்ளை வேலன் அவரிடம் வந்தான். "என்ன, இப்படி ஒரேயடியாக அண்ணன் வீட்டிலேயே தங்கிவிட்டாயே. எங்களையெல்லாம் மறந்துவிட்டாயா? என்று குழைந்து குழைந்து கேட்டான். "நீதானே அப்பா சொன்னாய், மூத்தபிள்ளை வீட்டிலே இருந்தால் நல்லது என்று?'' என்று கேட்டார்

முதலியார். "நான் அப்படி எண்ணிக்கொண்டு சொல்ல வில்லையே!" என்று ஏதோ அசட்டுச் சமாதானம் சொன்னான். கடைசியில் அழுது புலம்பித் தன் வீட்டுக்கு அழைத்துப் போனான். ஒரு வாரம் அவன் வீட்டில் ராஜோபசாரம் நடந்தது. அதற்குள் அண்ணனுக்குப் பொறுக்கவில்லை. அவன் ஓடி வந்து மறுபடியும் தன் வீட்டுக்கு அழைத்துப் போனான். இப்படியாகப் போட்டி போட்டுக்கொண்டு முதலியாருக்கு விருந்தும் உபசாரமும் நடந்தன. அவருடைய நண்பர் அவரிடம், "என்ன, நான் சொன்ன ஜோஸ்யம் பலித்ததா?" என்று கேட்டார். முதலியார் புன்னகை பூத்தார்.

முதலியாருக்கு கொஞ்சம் நோய் கண்டது. அப்போது நான்தான் அவரை வைத்துக் கொள்வேன் என்று அண்ணனும் தம்பியும் போட்டி போட்டனர். அவருடைய இடுப்பில் இருந்த சாவிக்கொத்தில்தான் அவர்களுக்குக் கவனம்.

கடைசியில் முதலியார்



இறந்து போனார். இரண்டு பிள்ளைகளும் அவருடைய சாவிக் கொத்தை எடுத்துக்கொண்டு அந்தத் தனியறைக்குப் போனார்கள். பெட்டியைத் திறந்தார்கள். பல ஆயிரம் ரூபாயைக் காணப்போகிறோம் என்று ஆவலுடன் இருந்தார்கள். அந்தப் பெட்டியைத் திறந்தார்களோ இல்லையோ, அவர்கள் திடுக்கிட்டுப் போனார்கள். பெட்டியில் ஒன்றும் இல்லை. வெறும் கூழாங்கற்களே இருந்தன. வீட்டுக்கார நண்பர் அருகில் நின்றிருந்தார். அவரைப் பார்த்து முருகன், "அப்பா பெட்டியில் இருந்த பணம் எங்கே?" என்று கேட்டான்.

"பணமா? அவரிடம் பணம் ஏது? அதைத்தான் முன்பே உங்கள் இரண்டு பேருக்கும் பிரித்துக் கொடுத்துவிட்டாரே. ஏதோ பொழுது போகவேண்டுமே என்று இந்தக் கூழாங்கற்களைக் கொண்டுவந்து ராம ஜபம் பண்ணிக்கொண்டிருந்தார். நாலுபேர் பார்த்தால் ஏதாவது நினைப்பார்களே என்று இந்த ஜபத்தை ரகசியமாகச் செய்துவந்தார். அவர் ஜபம் பலித்தது. கடைசிக் காலத்தில் அவரைத் திண்டாட விடாமல் நீங்கள் போட்டியிட்டுத் தாங்கினீர்கள். உங்களைப் போல் பிள்ளைகள் யார் இருக்கப் போகிறார்கள்?" என்றார் வீட்டுக்காரர்.

சகோதரர்கள் இருவரும், "அப்பா ஜபம் பலித்தது; நம்முடைய ஜபம்தான் பலிக்கவில்லை" என்று வீடு போய்ச் சேர்ந்தார்கள்.

க்விஸ்

(1) வைரங்கள் எரியும். சரியா, தப்பா?
(2) நரிகள் கூட்டமாக ஓடும். சரியா, தப்பா?
(3) சனி, குரு, புதன் இவைகளில் எது பெரிய கிரகம்?
(4) கீழ்க்கண்ட முதலடியுள்ள பாடல்களைப் பாடியவர் யார்?

(அ) தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை; (ஆ) முத்தைத்தரு பத்தித் திருநகை; (இ) ஒன்றே குலம், ஒருவனே தேவன்; (ஈ) மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளாய்; (உ) முத்திநெறி அறியாத; (ஊ) ஆடை குலைவுற்று நிற்கிறாள்; (எ) பாட்டியின் வீட்டுப் பழம்பானை; (ஏ) நானே சண்டாளன்.

(5) நூர்ஜஹானுடைய மற்றொரு பெயர்: அனார்க்கலி; சலீமா; மேஹர் உன்னிஸா; மும்தாஜ் பேகம்; நூர் உன்னிஸா - இவைகளில் எது?

(6) ராஜா தேசிங்கின் குதிரையின் பெயர்: நீலவேணி, பஞ்சகல்யாணி, ஹம்சதரங்கிணி, வேக வாஹினி - இவற்றில் எது?

(7) இமயத்தில் புலிக்கொடி நாட்டிய தமிழரசன்: நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவன், நின்றசீர் நெடுமாறன், நெடுஞ்சேரலாதன், கரிகாற் பெருவளத்தான், விஜயாலய சோழன் - இவர்களில் யார்?

8) பூண்டி நீர்த்தேக்கத்தை அமைக்க முதல் முதலில் யோசனை சொன்னவர் யார்?

(9) காந்திஜி தம் ஆயுளில் முதல் முதலாக ஒரு சினிமா பார்த்தார். அது ஓர் ஆங்கிலப் படம். அதன் பெயர் என்ன?

(10) அஜந்தா குகைகள் இந்தச் சம்ஸ்தானத்தில்தான் இருக்கின்றன: (1) மைசூர், (2) பரோடா, (3) ஹைதராபாத், (4) உதயபூர்.

(11) இந்திய சர்க்காரின் உணவு மந்திரியின் பெயர்: (1) ரோச் விக்டோரியா, (2) ஜயராம்தாஸ் தௌலத்ராம், (3) ஸ்ரீ பிரகாசா, (4) முன்ஷி, (5) கித்வாய்.

(12) இந்தியாவில் ஆலைகள் அதிகமாக உள்ள இடம் எது?

விடை

(1) போதிய சூடு இருந்தால் எரிய வைக்கலாம். (2) சரி. (3) குரு. (4) (அ) அதிவீரராம பாண்டியன். (ஆ) அருணகிரிநாதர். (இ) திருமூலர். (ஈ) ஆண்டாள். (உ) மாணிக்கவாசகர். (ஊ) சுப்பிரமணிய பாரதியார். (எ) தேசிகவிநாயகம் பிள்ளை. (ஏ) நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை. (5) மேஹர் உன்னிஸா. (6) பஞ்சகல்யாணி. (7) கரிகாற் பெருவளத்தான். (8) சத்தியமூர்த்தி. (9) மாஸ்கோ யாத்திரை. (10) ஹைதராபாத். (11) முன்ஷி. (12) பம்பாய்.

எண்ணிலே படங்கள்

(1 முதல் 9 வரையில்) “மூட்டை”



தாமரை இளவரசி

'சந்திரன்'

முன்னொரு காலத்தில் தடாக புரி என்ற ஊரில் வருண கேசரி என்று ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு வெகு காலம் குழந்தையே பிறக்க வில்லை. கடைசியில் காசி, ராமேசுவரம் முதலிய ஊர்களுக்குப் போய் ஏராளமான தானதர்மங்கள் செய்தான். அதனுல் அவனுக்கு அழகான ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்தப் பெண் குழந்தைக்கு நாள் நட்சத்திரம் பார்த்து, சுப முகூர்த்தத்தில் தாமரைவல்லி என்று பெயர் வைத்தான்.

அந்தப் பெண் வளர்பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்து வந்தாள். அவளுடைய முகம் சந்திரனைப்போல் பிரகாசமாகவும் மாதுளை முத்தைப்போல் அழகாகவும் இருந்தது. அவளுடைய உடல் தங்கக் கொடியைப்போல் துவண்டு அழகுடன் ஜொலித்தது.

வருணகேசரி தன்னுடைய பெண்ணுக்கு விதம் விதமாக அலங்காரம் செய்து பார்த்துச் சந்தோஷப் படுவான். தன் பெண்ணின் அழகைப் பார்த்துப் பார்த்து மகிழ்ச்சி அடைவான். யாராவது பார்த்தால் திருஷ்டி போட்டுவிடுவார்கள் என்று அவளுக்காகத் தனியாக ஓர் அரண்மனை கட்டினன்; ஏராளமான சேடிப் பெண்களையும் அமர்த்தினன். அந்த அரண்மனைக்குள் அவனைத் தவிர வேறு யாரும் வெளியே இருந்து நுழைய முடியாது. அவ்வளவு கட்டுக் காவல்!

ஒரு நாள் தாமரைவல்லி தன் தோழிகளுடன் நந்தவனத்தில் பந்து விளையாடிக்கொண்டிருந்தாள். அங்கே அழகான பளிங்குத் தடாகம் ஒன்று உண்டு. பந்தைத் துரத்திக்கொண்டு ஓடின தாமரைவல்லி அந்தத் தடாகத்துக்குள் எட்டிப் பார்த்தாள். என்ன ஆச்சரியம்! பளபளவென்று மின்னும் ஒரு தங்கத் தாம்பாளம் தெரிந்தது. அதையே பார்த்துக் கொண்டு நின்ருள். அந்தத் தாம்பாளத்துக்குள் பன்னிரண்டு குதிரைகள் பூட்டிய ஒரு தேரும், அதற்குள் ஒரு சுந்தர புருஷனும் தெரிந்தார்கள். அவனுடைய அழகைக் கண்டு தாமரைவல்லி அப்படியே சொக்கிப்போய் நின்ருள்.

அதற்குள் தோழிகளும் அங்கே வந்துவிட்டனர். இவள் எதையோ பார்த்துக்கொண்டு நிற்பதைக் கண்டு, "என்ன பார்க்கிருய்?" என்று கேட்டார்கள். தாமரைவல்லி, "அதோ பார்" என்று காட்டினள்.

அதைப் பார்த்த தோழிகள் கை கொட்டிச் சிரித்து, "தண்ணீருக்குள் தெரிவது வெறும் நிழல்; ஆகாய வீதியில் பக

வான் சூரியநாராயணன் தேரில் சவாரி செய்துகொண்டு போகிறான். அவனுடைய நிழல் தான் தண்ணீருக்குள் தெரிகிறது'' என்றார்கள்.

''நான் அவரைத்தான் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன்'' என்றாள் தாமரைவல்லி தன்னை மறந்து.

தோழிகள் எல்லோரும் அவளுடைய பேச்சைக் கேட்டு அதிசயப்பட்டார்கள். நடக்காத காரியம் என்று புத்தி சொன்னார்கள். ஆனால் தாமரைவல்லி தினம் காலையிலும் மாலையிலும் குளத்தங்கரையில் போய் உட்கார்ந்துவிடுவாள். கண் கொட்டாமல் சூரியபகவானையே பார்த்துக்கொண்டு பசி தாகம் பார்க்கமாட்டாள்.

இந்தச் சமாசாரம் ராஜாவின் காதுக்கு எட்டிற்று. ராஜா தன் மகளுக்கு எவ்வளவோ புத்தி சொன்னான். கேட்கவில்லை. ''நான் கல்யாணம் செய்து கொண்டால் சூரியநாராயணனைத்தான் கல்யாணம் செய்து கொள்ளுவேன். இல்லையென்றால் கன்னியாகவே இருப்பேன்'' என்று ஒரே பிடிவாதமாக இருந்தாள்.

தாமரைவல்லிக்குக் கல்யாணப் பருவம் வந்தது. எவ்வளவோ தேசத்து ராஜகுமாரர்கள் அவளுடைய அழகைக் கேள்வியுற்று அவளை மணம் பேசவந்தார்கள். தாமரைவல்லியோ அவர்கள் யாரையும் மணம் செய்துகொள்ள முடியாது என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டாள்.

ராஜாவுக்கு இதுவே ஒரு பெரிய கவலையாய்ப் போய் விட்டது. தன் பெண்ணின் இஷ்டத்துக்கு விரோதமாக எதையும் செய்ய அவன் விரும்பவில்லை. அவள் சொல்லுகிறபடி சூரியபகவானுக்கு அவளைக் கல்யாணம் செய்து வைக்கலாம் என்றால் முடிகிற காரியமா? தேவப் பிறவியாகிய சூரியநாராயணனை மனிதர்கள் எப்படி மணம் புரிந்து கொள்ள முடியும்? அது வெறும் பைத்தியக்கார எண்ணம் இல்லையா?

தன்னுடைய சபையைக் கூட்டி என்ன செய்வதென்று ஆலோசனை செய்தான். மந்திரிகள் என்னென்னவோ யோசனை சொன்னார்கள். ஒரு மந்திரி, ''ஓர் அரசகுமாரனுக்குச் சூரியனைப்போல் வேஷம் போட்டு, பன்னிரண்டு குதிரை பூட்டிய ரதத்தில் ஏற்றி வந்து இவர்தான் சூரிய பகவான் என்று ஏமாற்றிவிடலாம்'' என்றான். இன்னொருவன், ''குழந்தை அப்படித்தான் பேசுவாள். யாரையாவது தகுந்த அரசகுமாரனை அழைத்து வந்து கல்யாணத்தை முடித்துவிட்டால் பிற்பாடு எல்லாம் சரியாகப் போய்விடும்'' என்றான். இந்த யோசனைகள் ஒன்றும் ராஜாவுக்குப் பிடிக்கவில்லை. அப்போது ராஜாவின் சபைக்கு ஒரு ரிஷி வந்தார். அவர் ராஜாவின் கஷ்டத்தைக் கண்டு, ''நான் சூரியபகவானை உன் மகளுக்கு விவாகம் செய்து வைக்கிறேன். ஆனால் நான் சொல்லுகிறபடி அவள் கேட்கவேண்டும்'' என்

றார். ராஜா உடனே சந்தோஷமடைந்து அவரை நமஸ்காரம் செய்து தன்னுடைய பெண்ணின் அரண்மனைக்கு அழைத்துச் சென்றான்.

அரண்மனைக்குள் சென்ற ரிஷி தாமரைவல்லியைக் கண்டு, "குழந்தாய், சூரிய நாராயணனை விவாகம் செய்து கொள்வது என்றால் அது ரொம்பவும் கஷ்டமாய் இருக்குமே! நீ அந்த எண்ணத்தை விட்டுவிடு" என்றார்.

தாமரைவல்லி, "மகரிஷே,

அவரை அடைவதற்கு நான் எந்தக் கஷ்டத்துக்கும் உட்படுவேன். என் உயிரை வேண்டுமானாலும் இழப்பேன்!" என்றாள்.

அவளுடைய பிடிவாதத்தைக் கண்ட ரிஷி சொல்வார்: "அம்மா, உன்னுடைய உண்மையான காதலை மெச்சுகிறேன். நான் ஒரு மந்திரம் சொல்லிக் கொடுக்கிறேன். அதை இந்தத் தடாகத்தில் நின்றுகொண்டு நாற்பத்தைந்து நாள் விடாமல் உச்சரிக்க வேண்டும். அன்ன ஆகாரம் இல்லாமல் நாற்பத்தைந்து நாள் தண்ணீரில் நின்றுகொண்டிருக்க வேண்டும். உன்னால் முடியுமா?"

இந்தப் பயங்கரமான நிபந்தனையைக்கேட்ட ராஜா மனம் வருந்தினான். அரண்மனைப் பெண்கள் பயத்துடன் விழித்தனர். ஆனால் தாமரைவல்லி கலங்கவில்லை. "ஸ்வாமி! இது ஒரு பெரிய காரியமா? சந்தோஷமாக நீங்கள் சொல்கிறபடி செய்கிறேன். மந்திரத்தை உபதேசியுங்கள்!" என்றாள்.

ரிஷி தாமரைவல்லியைத் தனியாக அழைத்துச் சென்று சூரிய பகவானைக் குறிக்கும் மந்திரத்தைச் சொல்லி வைத்தார்.

மறுநாள் அதிகாலையில் தாமரைவல்லி ஸ்நானம் செய்து பயபக்தியுடன் தடாகத்துக்கு வந்து, சூரிய பூஜையை முடித்துத் தண்ணீருக்குள் இறங்கி நின்று, கண்ணை மூடிக்கொண்டு ஜபம் செய்யத் தொடங்கினாள். அரண்மனையில் உள்ள சேடிகள் யாவரும் இந்த அதிசயத்தைப் பார்த்துக்கொண்டு கரையில் வந்து நின்றார். முதல் நாள் ராஜாவும் வந்தான். தன் செல்வக் குமாரி இவ்விதம் ஆகாரமில்லாமல் நீருக்குள் நிற்பதை அவனால் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. அங்கிருந்து

துக்கத்துடன் போய்விட்டான்.

இப்படியாக நாற்பத்தைந்து நாட்கள் கடந்தன. தாமரைவல்லி கொஞ்சங்கூடச் சலிக்காமல், நின்ற இடத்தை விட்டு அசையாமல் இருந்தாள். அவளுடைய கண்கள் மூடியபடியே இருந்தன. வாய் மட்டும் மந்திரத்தை முணுமுணுத்துக் கொண்டிருந்தது. ஆகாரம் இல்லாமல் அவள் உடல் வாடிவிட்டது. முகத்தில் மட்டும் புன்னகை.

நாற்பத்தாறாவது நாள் பொழுது புலர்ந்தது. சேடிகள் யாரும் இன்னும் வரவில்லை. தாமரைவல்லி மட்டும் தடாகத்தில் நின்றுகொண்டிருந்தாள். கீழ்வானம் வெளுத்தது. திடீரென்று ஆகாயத்தில் ஒரு மின்னல் தோன்றியது. அந்த மின்னலிலிருந்து பன்னிரண்டு குதிரைகள் பூட்டிய ஒரு ரதம் கீழே இறங்கிற்று. தாமரைவல்லிக்கு நேர் எதிரில் வந்து ரதம் நின்றது. அதில் சூரிய நாராயணன் அமர்ந்திருந்தார்.

"தாமரைவல்லி!" என்ற இனிமையான குரலைக் கேட்டு அவள் கண் திறந்தாள். எதிரிலேயே நாயகன் வந்து நிற்பதைக் கண்டதும் சந்தோஷம் தாங்காமல் விழுந்து விழுந்து நமஸ்காரம் செய்தாள்.

சூரியபகவான் பேசலானார்: "பெண்ணே! உன் தவத்தைக் கண்டு சந்தோஷமடைந்தேன். உனக்கு என்ன வேண்டும்? கேள்! தருகிறேன்."

"ஸ்வாமி! தங்களுக்கு நான் மாலையிடவேண்டும். இதைத் தவிர எனக்கு வேறு ஆசை இல்லை" என்றாள் தாமரைவல்லி.

"அப்படியானால் நீ இந்த உருவத்தில் இருந்தால் அது சாத்தியம் இல்லை. உன்னை ஒரு புஷ்பமாகச் செய்து விடுகிறேன். நான் தினம் காலையில் வரும்போது நீ உன் கண்ணைத் திறப்பாய். என் கரங்களினால் உன்னை அன்புடன் தழுவுவேன். சம்மதமா?" என்று கேட்டார் பகவான்.

அதைக் கேட்ட தாமரைவல்லி சந்தோஷம் தாங்காமல், "ஸ்வாமி! எந்த உருவத்தில் இருந்தால் என்ன? உங்களை அடைந்தபின் எனக்கு வேறு ஒன்றும் கவலையே கிடையாது" என்றாள்.

"உன் காதலை மெச்சுகிறேன். இன்னொரு வரமும் தருகிறேன். இனி உலகத்தில் தோன்றும் கவிகள் எல்லாரும் அழகான பெண்ணின் முகத்துக்கு உன் முகத்தைத்தான் உதாரணமாகச் சொல்லுவார்கள்" என்று சொல்லி, பகவான் மறைந்தார்.

அவர் மறைந்தவுடனே தாமரைவல்லி நின்ற இடத்திலேயே தாமரைப் புஷ்பமாக மாறினாள். அன்றுதான் முதல் முதலாக உலகத்தில் தாமரைப் பூ தோன்றியது.



நீங்களே செய்யலாம்

பெட்டிக் கடிகாரம்



தேவையானவைகள்: 1 அடி நீளமுள்ள அட்டைப் பெட்டி (4 அங்குலம் அகலமாவது இருக்கவேண்டும்.) வர்ணக் காகிதம்; செலபோன் காகிதம்; கொஞ்சம் நூல்; நம்பரும் முள்ளும் எழுதிய கடிதம். பெண்டுலத்துக்கு வட்டமாக உள்ள டப்பா மூடி அல்லது கனமான அட்டை.

செய்யும் விதம்: படத்தை முதலில் நன்ருகக் கவனித்துக் கொண்டால் போதும். மேல் பக்கத்து அட்டையில் பாதிக்குமேல் நீண்ட சதுரமாகவும் கீழ்ப்புறம் வளைவாகவும் வெட்டிக் கொள்ள வேண்டும். மேல் பாகத்தில் வட்டமாக வெட்டிக் கொள்ளுங்கள். நூலில் வட்டமான டப்பா மூடியைக் கட்டி, பெண்டுலமாகத் தொங்க விடுங்கள். மேலே செலபோன் காகிதத்தை ஒட்டி விடுங்கள். எண்களும் பெரிய, சிறிய முட்களையும் எழுதிய காகிதத்தை மேலே வட்டமாக வெட்டிய இடத்தில் ஒட்டிவிடுங்கள். அதன்மேல் செலபோன் காகிதத்தை ஒட்டி வைத்தால் கண்ணுடி போட்டதுபோல இருக்கும்.

இப்பொழுது அட்டைப் பெட்டியின்மேல் வர்ணக் காகிதங்களை ஒட்டி விடுங்கள். பின்புறம் ஆணியில் மாட்டும்படி அட்டையில் ஒரு துவாரம் செய்து, பெட்டியை ஆணியில் மாட்டிவிட்டால், நீங்களே ஒரு சமயம் மணி பார்த்து ஏமாந்துவிடுவீர்கள். அவ்வளவு தத்ரூபமாய் இருக்கும்.



தீபாவளி மலர்

என் அன்புள்ள கண்ணன் ஆசிரியருக்கு, வணக்கம். நலம். மலர் படிக்கப் படிக்கத் தெவிட்டவில்லை. வண்ண நீர் விளையாட்டு என்னும் படத்தை வெட்டி ஒட்டியிருக்கிறேன். அது பலே ஜோராக இருக்கிறது. நாயும் திருடனும் என்ற கட்டம் நல்ல பொழுதுபோக்காக அமைந்துவிட்டது. என் தந்தை தங்கள் ஒளிமிகு மலரைப் பார்த்து விட்டு மிகவும் சந்தோஷப்பட்டார். இவ்வருஷம் கண்ணன் குடியரசுமலர் வெளியிடும்படி கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

—S. தக்ஷிணாமூர்த்தி, (D. 28) புளியறை.

(குடியரசு மலர் இருக்கட்டும்; இந்த இதழுடன் கண்ணனுக்கு ஒரு வருஷம் முடிந்துவிட்டதே. அதைவிட ஆண்டு மலராக வெளியிடுவது நல்லதில்லையா? ஆ-ர்.)

ஃ ஃ ஃ

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு, தங்கள் தீபாவளி மலரைப் பார்த்தேன். தீபாவளிக்கு முதல்நாளே வீடு ரகளைப்பட ஆரம்பித்து விட்டது. நான் வாங்கிய மலர்கள் எல்லாவற்றிலும் இந்த மலர் வாங்கியதில் ஒரு நிறைந்த திருப்தி உண்டாயிற்று. குழந்தைகளுக்கு ஏற்பட்ட சந்தோஷமும் குதூகலமும் ஒருபுறம் இருக்கட்டும். நமக்கே குழந்தைகளுக்கு ஒரு சிறந்த பரிசைக் கொடுத்திருக்கிறோம் என்ற திருப்தி ஏற்படுகிறதே; அதைத்தான் குறிப்பிடுகிறேன். ஒரு விசேஷமலர் என்றால் அதுவும் குழந்தைகளுக்கு ஒரு மலர் என்றால், இதைப் போலத்தான் இருக்கவேண்டும் என்பதைத் தெரிவிக்கவே இதை எழுதுகிறேன்.

—ஏ. எஸ். கிருஷ்ணமூர்த்தி, டி. ஐ., திருச்சிராப்பள்ளி.

(வந்தனம். ஆ—ர்.)

ஃ ஃ ஃ

பேனா நண்பன்

தபால் தலை சேகரிப்பவர் இலங்கை முத்திரை தேவைப்பட்டால் என்னுடன் பேனா நண்பனாகச் சேரலாம்.

—க. சதானந்தன், அலன்வீடு, காரைநகர், (S. 73) யாழ்ப்பாணம்.

இந்தக் கோலத்தில் உள்ள எண்களை இடம் மாற்றி அமைக்க வேண்டும். எந்த வரிசையிலிருக்கும் எண்களைக் கூட்டினாலும் சரியாக நூறுதான் வரவேண்டும். உங்களால் முடியுமா? (விடை கடைசிப் பக்கத்தில் இருக்கிறது.)

—K. S. ரகுபதி (R. 377), நித்தியவனம்.



ஃ ஃ ஃ

இந்தக் கடையில் எட்டு விளையாட்டுச் சாமான்கள் இருக்கின்றன. அவைகளில் ஏழு சாமான்களில் ஓர் ஒற்றுமை இருக்கிறது. எட்டாவது மட்டும் தனி. அவை எந்த விதத்தில் ஒற்றுமை? எது அவற்றில் தனி என்பதைக் கண்டுபிடிக்க முடியுமா?

—சந்திரசேகரன், K. (C. 8)



(முடியாவிட்டால் கடைசிப் பக்கத்தில் விடை இருக்கிறது; பார்த்துக்கொள்ளுங்கள். ஆ—ர்.)

நீர்குடித்துத் தீத்தின்று நீண்டதொரு சத்தமிட்டு
ஊரூராய் ஓடுகின்ருன் ஓரரக்கன்-பேருரைப்பீர்!
மக்கள்தமைவிழுங்கி மற்ருேர் இடந்தனிலே
கக்கிவிடுகின்ருனே காண்!

—வே. ப. பாபுல், அரூர்.

(விடை வேறு பக்கத்தில் இருக்கிறது.)

ஃ ஃ ஃ

ஒரே கோட்டில் வரைந்த படம்



எழுதியது: ரமணி ஹரிஹரன், ஆரணி.

ஃ ஃ ஃ

பாட்டு

குயிலே குயிலே கூவாதே
குழந்தை கண்ணன் தூங்குகிருன்.
மயிலே மயிலே அகவாதே
மன்னன் மடியில் தூங்குகிருன்.
காக்கா காக்கா கரையாதே
கண்ணன் மடியில் தூங்குகிருன்.
குருவி கிகி என்னுதே
குமரன் மடியில் தூங்குகிருன்.
எறும்பே அருகில் வாராதே
என்றன் செல்வன் தூங்குகிருன்.
ஒருகணம் கழித்து வாருங்கள்.
உங்கள் தோழனைப் பாருங்கள்.
அருமைக் கண்ணனைக் காணுங்கள்
ஆடிப் பாடிக் களியுங்கள்.

—என். ராஜு, T., வாடிப்பட்டி.

விடைகள்

விடுகவி: புகைவண்டி.

* * * *

கோலத்தில் உள்ள எண்களை இப்படி மாற்றி அமைக்கலாம்.



* * * *

கடையிலுள்ள விளையாட்டுச் சாமான்கள்: பலூன், படம், பலகை, பட்டம், பம்பரம், பல்லாங்குழி, பந்து—எல்லாம் முதல் எழுத்து 'ப'வில் ஆரம்பிக்கிறது. அதுதான் ஒற்றுமை. எட்டாவது மோட்டார்கார். இது தனி.

21178

* * * *

'புரிஞ்சுது'

கந்தசாமி ஒரு பட்டிக்காட்டான். அவன் பையன் பக்கத்து நகரில் போய்ப் படித்து வந்தான். அவன் தினம் நாழிகை கழித்து வீட்டுக்குத் திரும்புவதைக் கண்ட கந்தசாமி, "பள்ளிக்கூடம் சாயங்காலமே விட்டுடருங்களே, உனக்கு மட்டும் ஏன் இத்தனை நாழி ஆவுது?" என்றான். அதற்கு அவன் மகன் சொன்ன பதில்: அது உனக்குத் தெரியாது, அப்பா. பள்ளிக்கூடம் விட்டதும் ஒரு இடத்துக்குப் போவேன். அது உனக்குச் சொன்னால் புரியாது. அப்புறம் கொஞ்ச நேரம் கழிச்சு இன்னொரு இடத்துக்கு விளையாட்டா நடந்து போவேன். அதையும் உனக்குச் சொன்னாத் தெரியாது. அதுக்கப்புறம் அங்கேருந்து இன்னொரு இடத்துக்குப் போய் உனக்குத் தெரியாத ஒரு விளையாட்டு விளையாடுவேன். அந்த இடமும் சொன்னால் உனக்குப் புரியாது. அப்புறம் நேரே வீட்டுக்கு வருவேன். நம்ம வீடுதான் உனக்குத் தெரியுமே"

கந்தசாமி, "அதானே பார்த்தேன். வெகு நாளா உன்னைக் கேக்கணும், கேக்கணுங்கிருந்து. இன்னிக்குத்தான் புரிஞ்சிக்கிட்டேன்" என்றான்.

—லலிதா, கடுவங்குடி, (மாயவரம்.)

எப்படி?

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.

கண்ணன் கழகம் உங்களுக்காக ஆரம்பித்திருக்கும் சங்கம். இந்தச் சங்கம் புது மாதிரியானது. இதற்குப் பல அருமையான திட்டங்கள் இருக்கின்றன. இதில் சேருபவர்களுக்குப் பல சௌகரியங்கள் உண்டு. நண்பர்கள் ஏராளமாக ஏற்படுவார்கள். விளையாட்டு, எலெக்ஷன், உல்லாச யாத்திரை, பரிசுகள், அறிவு வளர்ச்சி சாதனங்கள் முதலிய எத்தனையோ நன்மைகளும் வசதிகளும் கிடைக்கும். இதில் 4500 பேருக்குமேல் நிரந்தர அங்கத்தினராகச் சேர்ந்துவிட்டார்கள்.

உங்களுக்கும் இதில் சேர வேண்டுமென்று ஆசையாக இருக்கும். இதுவரையில் நீங்கள் சேராமல் இருந்தால் இப்பொழுதுகூடச் சேரலாம். சேருவது மிகவும் சுலபம். இந்த இதழிலேயே ஒரு கூபன் இருக்கிறது. அதைப் பூர்த்தி செய்து கத்தரித்து அனுப்பவேண்டும். அவ்வளவுதான்.

இதே போன்ற கூபன்கள் ஒவ்வொரு மாதமும் கண்ணனில் வெளிவரும். தொடர்ந்து மூன்று மாதக் கூபன்களை அனுப்புகிறவர்கள் கண்ணன் கழக நிரந்தர அங்கத்தினர்கள். அவர்கள் பெயரைக் கண்ணனில் வெளியிடுவோம். மூன்று மாதக் கூபன்களைப் பூர்த்திசெய்து மொத்தமாக அனுப்பினால் போதும். அவர்களுக்கு இனாமாக எனாமல் பாட்ஜ் ஒன்று கழகத்திலிருந்து கிடைக்கும். இதற்குச் சந்தாத் தொகை எதுவும் கிடையாது; கூபன்கள்தான் அனுப்பவேண்டும். ஒரே குடும்பத்தில் உள்ள குழந்தைகள் ஒரு கூபனைப் பூர்த்தி செய்து மற்றவர்கள் பெயர்களையும் அதில் சேர்த்து எழுதி அனுப்பலாம்.

இந்த இதழில் கடைசி அட்டையில் 'மெக்கானோ' பரிசுப் போட்டி வெளியாகியிருக்கிறது. இதில் கண்ணன் கழக அங்கத்தினர்கள் மட்டுமே கலந்துகொள்ளலாம். மற்றவர்கள் கலந்துகொள்வதற்கில்லை. இந்தப் போட்டியில் எல்லாக் கண்ணன் கழக அங்கத்தினர்களுமே பங்கு எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

Reg. No. M. 5542

‘மெக்கானோ’ பரிசு

கண்ணன் கழக அங்கத்தினர்களுக்காக இது வரையில் நான்கு போட்டிகள் நடந்துள்ளன. இது ஐந்தாவது போட்டி. குழந்தைகளுடைய கற்பனையையும் அறிவையும் தூண்ட இந்தப் போட்டிகள் உதவுகின்றன.

சென்ற மாதமே அறிவித்தபடி ஜோரான ‘மெக்கானோ செட்’ ஒன்றைப் பரிசாகக் கொடுக்கப் போகிறேன். இந்தத் தடவை கதை ஒன்றும் நீங் எழுத வேண்டியதில்லை. ஆனால் திடீரெ ‘கண்ணன்’ போன்ற ஒரு பத்திரிகைக்கு உங் ஆசிரியராகப் போட்டால் நீங்கள் எப்படி அ நடத்துவீர்கள்? என்ன என்ன அம்சங்களைச் சே பீர்கள்? எந்த மாதிரி கதைகளைப் பிரசுரிப்பீர்க இதைத்தான் நீங்கள் எழுதவேண்டும். யார் ரொம்பப் பிரமாதமாக எழுதுகிறார்களோ அவர்களுக்குப் பரி அடுத்தபடி வரும் நல்ல கட்டுரைகள் ஒன்று இரண் டுக்கும் ஏதாவது பரிசு உண்டு. இந்தத் தடவை இந் தப் போட்டியில் எல்லா அங்கத்தினர்களும் உற்சாகத் துடன் கலந்துகொள்வீர்கள் என்று எதிர்பார்க் கிறேன். ஏனென்றால் நீங்கள் ஒவ்வொருவரும் ஆசிரியராக உங்களை எண்ணிக்கொண்டு எழுதுவது சுலபமாயிற்றே!

நிபந்தனைகள்:

1. நீங்களாகவே சொந்தமாய் எழுதியதாக இருக்கவேண்டும்.

2. கண்ணனில் 4 - முதல் 6 பக்கங்களுக்கு மேற்படக்கூடாது.

3. எழுதுகிறவர் கண்ணன் கழக அங்கத்தினராக இருக்க வேண்டுர்.

4. தலைப்பில் பெயர், விலாசம், கண்ணன் கழக நம்பர் இவைகளைத் தெளிவாக எழுதவேண்டும். நம்பர் வராதவர்கள் ஒரு கூபனைப் பூர்த்தி செய்து அனுப்பவேண்டும்.

5. உங்கள் பெற்றோர்களோ வாத்தியாரோ உங்கள் வயசுக்கு அத்தாட்சி கொடுக்கவேண்டும்.

6 ஒரே பக்கத்தில் பளிச்சென்று மையால் எழுதவேண்டும்.

7. உறையின்மேல் ‘மெக்கானோ பரிசுக் கட்டுரை’ என்று எழுதவேண்டும்.

8 கட்டுரை கிடைக்கவேண்டிய கடைசித் தேதி 10-1-1951.